உ

[illegible] துணையாம்

ஸ்ரீ கந்தபுராணச் சுருக்கம்

(வசனம்)

இஃது

இராமநாதபுரம்

வித்துவான் மாப்பிள்ளை

வீ. தங்கவேலுஸாமித் தேவரவர்கள்

இயற்றியது.



முதற்பதிப்பு.

சென்னை,

திருவல்லிக்கேணி,

கல்விப்பிரகாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கலானது.

1907ளு ஜனவரி௴ 20௳

... He is a respectable gentleman with pleasant man... ...serves all the encouragement and I have no doubt be ...the test on any occasion. I sincerely wish him every suc- ...re as an eminent violinist.

(Signed) S. A. RAGUNATHA CHARIAR,
Hony Secretary,
The Sri Saraswathi Gana Sabha.

———o———

Madras 29th June. 1905.

We have much pleasure in giving testimony to the efficiency ... Th... ...velu Sawmy Thevar of Ramnad Samasthanam in ... art of playing violin, which we had the opportunity of testing on the occasion of the grahapravesam ceremony of our sabha on the 11th June, 1905, when he enriched the minds of the audience.

We are very sorry for his absence from our midst and wish him every success wherever he goes.

(Signed) N. DURAIVELA CHARI, B. A.
C. BURANGAM NAIDU,
Honorary Joint Secretaries,
The Sa...tha Lakshmi Vilasa Sabha.

———o———

respecta...
him suc...

...have much pleasure in stating that I heard M.R.Ry. Thanga...amy Thever Avergal of the Ramnad Samasthanam, play on ...iolin and was much pleased with the exquisite skill with which ...andled the instrument. He is a near relative of the Ramnad ...h and is as pleasant a gentleman in his manners and deportment ...e is a master of Hindu music. I hope he will be better known ... and his talents will be fully appreciated.

(Sd) L. C WILLIAMS,
Inspector of Schools.

We have much p... Thangavelu Swami T... of a very respectable ...

சிவமயம்

சிறப்புப் பாயிரம்

சென்னை, ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் ம-ா-ா-ஸ்ரீ, கோ-வடிவேலு செட்டியாரவர்கள் இயற்றிய

நிலைமண்டில வாசிரியப்பா.

புண்ணிய[illegible] சாதனன் புத்தமு தன்னவன்
பண்ணியன் [illegible] மாழியுமை பாகத் துற்றவன்
தற்பரன் சிற்பரன் சம்பு சநாதனன்
அற்புத னரவணி யமலன் றருளு
பாலத் திருக்கிற் பண்ணவ ரிடுக்கண்
[illegible]
[illegible]மலம் பாற முனிவரர் போற்றிட
வந்தருள் குருபரன் வள்ளி மணாளன்
அந்தமில் சோதி யறுமுகக் கட[illegible]
உளக்கலுக் கன்றி யூன்கணுக் கொளித்துத்
துளக்கற நிமிர்ந்த தோய்வில னெற்கருள்

பகவன் முருகன் பன்னிரு தோளன்
இகலற யாவுமா யிலங்கும் பெம்மான்
தனியர் விருந்துக் [illegible]
இனியா ருளமல ரெழுந்தருள் கந்தன்
புர்வுற விரிவுறப் பொருந்த மாகச்

சரிதங் கூறுந் தமிழ்ச்செயுட் கிணங்கச்
சற்குணப் பெரிய சாமித் தேவனும்
கற்பும் பொற்புங் கறையில் கல்வியும்
தரமொடு பிறவுந் தயங்கிய சிவசுந்
தரனாய்ச் சியாருந் தாமுற் பவத்திற்

பண்ணிய தவத்தின் பயனாய் வந்தவன்
எண்ணிலாக் கல்வி யியைந்தவ ரிடத்துக்
கற்றவன் றமிழைக் காட்சிக் கினியன்
சொற்றிடு வளனெலாஞ் சேர்ந்துற வாயொளிர்
முகவையம் பதியான் முரனில் குணத்தான்

மிகவிருப் புற்று மேன்மையார் கிதம்
கற்றிறத் தவருழி நயமுறப் பெற்றவன்
பற்பல பட்டமும் பலவிடத் துற்றவன்
பதியிடத் தேகிய பாஸ்கர சேது
பதிவளன் மைத்துனன் படர்வே தாந்தத்

துறையினி துவந்தவர் தொடர்புமேற் கொண்டவன்
நிறைவா னகத்து நிலேத்து வீசு
புகழ்பெறு குலன்வரு புமானென தன்பன்
யுஞ்சொலும் பான்மை யுற்றிடு தங்க
வேற் சாமி தேவ வித்தக னுவலர்

ஏற்ற மிக்க திதுவே யாமெனச்
சொல்வளம் பொருள்வளந் துதிவள [illegible]றைய
அல்வள மகல வரனருள் சாரக்
கத்திய வடிவிற் கனிவுட னெருனூல்
இத்தமிழ் மக்களுக் கியற்றியீந் தனனே

சிவமயம்.

அநுக்கிரக மணிகை.

	பக்கம்.
1-வது உற்பத்தி காண்டம்.	
2-வது அசுர காண்டம்.	32
3-வது மகேந்திர காண்டம்.	55
4-வது உயுத்த காண்டம்.	76
5-வது தேவ காண்டம்.	172
6-வது தட்ச காண்டம்.	185
7-வது உபதேச காண்டம்.	238

பிழைதிருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
1	28	சுருச்கி	சுருக்கி
2	5	சுருக்கிப்பாகார்	சுருக்கிப்-பாகார்
2	15	கார்த்புரா	கர்தபுரா
5	6	கம. வெ	ஸ்ரீ. கம. வெ.
5	15	வாமாருக்	வரமாருக்
5	6	கொகையா	தொகையா
5	28	விண்மணி	வின்மணி
6	4	க்ர்ஞ்சி	காஞ்சி
6	23	வைரவக் கசவுன்	வைரவக் கடவுன்
[illegible]	4	மெ்ய்யறு	மெய்யறு
18	25	தான்	தாம்
15	4	நிலகண்டவன்	நீலகண்டன்
15	[illegible]	காலகண்ட	காளகண்ட
2[illegible]	[illegible]	முடியினை	முடிபினை
22	[illegible]	பராசட்ரிஷி	பராசரிஷி
30	[illegible]	மாயாபுரி	[illegible]யமாபுரி
31	[illegible]	சேய்ஞாலூர்	சேய்ஞலூர
42	11	சிஞ்சமுகனும்	சிங்கமுகனும்
51	33	அசகமுகி	அசமுகி
52	4	ஒழித்திரு	ஒளித்திரு
54	[illegible]	[illegible]	பரம
[illegible]	18	பயத்திற்	புயத்திற்
64	32	மதம்	மகம்
106	31	சப்தம்	சபதம்
131	11	இங்கமுகன்	சிங்கமுகன்
		மிரளமிரள	மருளமருள
194	4	பார்பதியார்	பார்ப்பதியார்

உ

வேலுமயிலுந் துணை.

முகவுரை.

சிவநேசச் செல்வர்காள்!

அகண்ட பரிபூரண வநாதிமல முத்த சித்துருப்பரம் பொருளாஞ் செங்கைவேற் சிவகுமரனது மாச்சரிதத்தின் விரிவை, யக்கடவுளினது மெய்யன்பரடியார்க்கு மடியரினுபய சரணாரவிந்தங்களைச் சிரத்தணியாப்பூண்டவோர் பெற்றியிலென்றுந் தமிழியாப் புகழ்போன்றேவுள்ளத னக்கோடித் தெய்வசம்பத்தையுடைய நாமவேன் மன்னர்பிரான் ஸ்ரீமது. ஹிரண்ய கர்ப்பயாஜி ரவிகுல ராஜா முத்து விஜய ரகுநாத பாஸ்கரஸேது பதியவர்களினற்பணித்திறத் தாற் சுருக்கிப்பெருக்க முறவ வாவலானேன். இச்சுருக்க மான்மாக் களின்றருக் கொழியப் பேரின்பம் பெருக்க நிலையுறுமென்பதினளக்கருஞ் செயற்களைச் சிறியனியானோ விரிக்குந்திறத்தன்? ஸ்ரீ கந்தர் சஷ்டியினருநாணோற்புற்குகபவனது விரி[illegible] களை விரிக்கும் விரிவைச் சுருக்கிப் பாராயணஞ்[illegible] யெனமன மூசலாடினர்க்கோர் பேருறுதலெ[illegible] வி[illegible]க்கஞ்சுருக்கிற்றா மெனுமியலையே [illegible] பரிதுங் [illegible]பால தானேன். அளக்கலாசா நற்கல்வி [illegible] செல்வத்துயர்ந்த விருமுது பெரியோரெனதித் தொழிலிற் கந்தம்பெற விருக்குங்கந்தவேட் சொந்த நோக்கிப் பேராதரஞ் செய்வரெனுந் துணிபை மேற்கொண்டிருக்கின்றேன்.

வீ. த.

உ

திருமுருகன் றுணை,

பாயிரம்.

ஸ்ரீமது பாஸ்கரஸேதுபதி மகாராஜா அவர்களா லருளப்பெற்றது.

விருத்தம்.

பரமனார் விழியிற்றோன்றிப் பரமனா யுலகந்தன்னில், வரமெலாமன்பர்க் கீயவலிய வந்தாண்ட வெல்லாங், கரதலாமலகம் போலக் கூறுமாக்காந்த நூலைத், தரவெனச் சுருக்கித்தந்தான் றங்கவேற் சாமிதானே (1)

படையுடை முகவைவாழும் பண்புறுந் தேவனாகிச், சடையவனடியானான தங்கவேற்சாமிசெய்த, நடையதாங் காந்தக்கண்டு ஞானிலந்தன்னிலுள்ளோ, ரிடைவிடாதயம் போலாகி யினிது வீற்றிருந்தார் மாதோ. (2)

வேம்பத்தூர் சிலேடைப் புலியாகிய ஸ்ரீ பிச்சுவைய ரவர்களால் தரப்பெற்றது.

வெண்பா.

போகாத சஞ்சிதத்தைப் போக்கி யருள்கொடுக்கும், வாகான காந்தவிரி வைச்சுருக்கிப் பாகார், விடையை நிகர்த்ததங்க வேற்சாமி செய்த, நடையே சிறந்த நடை. (1)

சேது சமஸ்த்தானம் மஹாவித்வான் ஸ்ரீமது உபயவேதாந்தேத்யாதி ஸ்ரீமான் சிற்றந்திக்காடு ஸ்ரீநிவாஸா சார்ய ரவற்களாற் றரப்பெற்றது.

ஸ்ரீதங்கவேல்ஸ்வாமின்ரு பாலவர்ய: வித்வான் மஹாஸ்கந்த புராணசாரம். சக்ரேபரபந்தம் த்ரவிடோக்திஜாலை: ஸம்ஸாரஹத்யை விதுஷாம் ஸகுகாய. (1)

பர, கோ. இத்யாதி.

...க்வான் ஸ்ரீமான் ச, பு, துருஸ்வாமி நாயடு அவர்கள்.

...கட்டளைக் கலிப்பா.

ந... ...ரணையன்பா னூங்குறப்பயில்காந்தபுராண... க்குப ... ...வதனைகட்கும், வீயுமூப்பிறப்புப்பிணிக்கூற்றிற்குஞ், ... கல்லமிழ்தந்தனைத் தப்புடைச் சூரியர் பருகித்தினைப் போச்சுவான், வனைதற் செய்தளித்தான் வசனமதா வாழ்கர் நேடெழிற் றங்கவேற்சாமியே. (1)

நாகூர் ஸ்ரீமான் குலாம்காதிறு நாவலரவர்களாற் றரப்பெற்றது.

கோச்சகக் கலிப்பா.

மாமலையும் வாசுகியு மத்தமுமா ஞானமெனத், தாமலையப் பாற்கடலைக் கடைந்தமுது தனைத்திரட்டித், தோமலையப் பல்கோடி சுரர்க்களித்தா னெனக்கூறு. நேமலையவ்வளவுடைய நீள் சடையான் செயலாங்கு. (1)

ஓராறு திருமுகமு மொருமயிலும் வடிவேலும், ஈராறு மலர்க்கரமுமிரு மயிலு முடையான்றன், ஏராருங் காந்தமெனுங் கடல்கடைந்திட் டிந்நூலாஞ், சேராருமா ரமுதைத் திரட்டியுரியவர்களித்தான். (2)

எத்திசையும் புகழ்கொண்ட விரும்பொதியி லெனுமலையான், பத்தியனுமாறுத பாண்டிவள நாடான், நத்தியலும் பெரும்பணையும் பூங்காவு மனிசூழ்ந்து, முத்தமிழுங் குடியிருக்கு முகவையெனும் பேரூரான். (3)

அருமரணும் பன்மலரினகன் பொழிலு நாற்பாலும், பெருமதிளும் நிலங்
தோங்கிப் பிறங்குபுகழ் வாணியெனும், ஒருமகளும் விமலையெனுமொருமகளு
மாச்சிறந்த, இருமகளுமாறுமல் விளையாடு மெழின் மனையான். (4)

வார்தாங்கு முலைமடவார் வேளென்று மயருங்கச், சீர்தாங்கு பேரழகு
காற் குணமுஞ் சிறந்துள்ளான், பார்தாங்கு தடந்தோளிற் பகையவரைப் புற
ங்காணத், தார்தாங்கு தங்கவேற் சாமித் தமிழ்வலனே. (5)

வெண்பா.

முக்கனியென் கோவமுத மென்கோதே னென்கோ, எக்கனியென் கோம
ற் றெவனென்கோ, மிக்கபுகழ் அங்கவேற் சாமி யகங் கன் றிருமாலாந், தங்க
வேற்சாமி தமிழ்.

சிவகங்கை ஸ்ரீ.எஸ். பெரியசாமித் தேவரவர்கள்.

வெண்பா.

சருவ சனமகிழ்காக் தத்தின் கரையைத்,திருவசன மாகச்சிறக்க, மருவில்
லா, அங்கவே லாரு மறுமுகன்று லைப்பணியுந் தங்கவேர்சாமி செய்தான்.(1)

வருங்கவலை யொழித்திரப்போர்க் கனுதினமுஞ் செம்பொன்னள்ளி
வரையா தீந்து, கருங்கவலை யுலகதனிற் புகழ்படைத்த பாற்கரவேள் கருதப்
பெற்றோன், நெருங்கவலை விழிமாதர் மதன்றங்கவேற்சாமி நேயன் செய்தா
ன், சுருங்கவலைச் செய்பருதிபோல்வசன மன விருளைத்துரக்க மாறோ. (2)

இராமநாதபுரம் ஆலூர் ஸ்ரீ கிருஷ்ணகவி,

கந்தபத்யம்.

வசமத்ராவிடகதகா ருசிரஸ் காந்தார்த்த மந்துலோகுலுசதுவ, நரசி
யிஞ் செதங்கவேலிதி யுசிதம் பகிஸிவுகி பொகடியுல்லமு பூசெ, அங்கிபலய்
புலுகிகிகி செக்கடு, நொஸகு சுறுவ்ருஷபமெக்குமாதோ, ஸங்கத்தமுகறு
ண்டறுநக் நடஸாயத துநிங் சதல வாணைதிர்.

ஆண்டுகொண்டான் சுப்பிரமணியப் புலவரவர்களின் மருகர் பூச்சேரி ஸ்ரீ சே, பழனி வேலுப்பிள்ளை யவர்கள்.

அறுசீர்க்கழில் நெடி லாசிரியம்.

காந்தமெனும் விரிகடலிற் சுருத்தென்னு மேருமத்தைக் காணவூன்றிச்,
சார்ந்தவிட்பூவுறை மாந்தர் போந்த செவிவாய் மாந்தத் தகையபோதந், தேர்
ந்த மனத்தாற்கடைந்து தெவிட்டாத வானர்தந்திகழ வெய்தி, யீந்தவனன்
னையமிழ்தங்கு கனருட் கொடங்க வேலென்னுமாலே. (1)

கட்டமுகன் றங்கவேற்சாமி யின்றன் பிட்டிலிசைக் கானங்கேட்டாற்,
பட்டமராமுந்தளிர்க்குந் சிலையுமெழு காயுருகும் பசுவூந்தான் செய், நட்டனை
விட்டின் னமிழ்தங் கொடுக்கும் விடவரவ முந்தனல்கு மென்னின், வட்ட
வுலகினி லிதனுக்கிணை சொல்லவே றென்றும் வகைகாணோமால். (2)

சென்னை திருவேட்டீச்சுரம், காக்கரூர். சிங்காரவேள் முதலியார். மகனார், திரு. சிவ சங்கர பண்டிதர் அவர்களால் தரப்பெற்றது.

கங்கைமதி புனைசடிலத்திறைக்குபதே சித்தருளுங் கருணை மூர்த்தி,
செங்கையில் வேலெடுத்தடியார்க்கருள் சுரக்கும் பெருங்கருணைத் திறத்தி
னோடு, மங்களமார் சரிதையெலா மினிதுரைக்குங் காந்தத்தை மகிழ்ந்தியாரு
ஞ், சங்கையிலா தெளிதுணரத் தமிழ் வசனச்சுருக்கமதாய்ச் சாற்றினனால். 1

அன்னவன்யாரென வினவிலருந்தவத்தோர் மிகவிரும்பி யடைந்து வை
கக், கன்னலெலாங் கமுகெனவுங் கரும்பெனச் செஞ்சாலிகளுங் கலந்து தோ
ன்றிப், பொன்னகரங்கவலகெடு வளமலிந்த புகழ் முகவை புரந்து வாழும்,
மன்னவன் பாற்கரசேதுபதிக்கி னியமைத்துனனு மகிமையோனே. (2)

சங்கீதப் பேராமுதந்தனையெவர்க்குமிக விரும்பித் தானஞ்செய்து, மங்கா
தபெருஞ்சீர்த்தி யெத்திசையு மிகவளர வளர்க்குஞ்சீரான், செங்காந்த ளலர்க்
குமணங்கமழுங் கந்தமாதனச் செஞ்சிகரிமேய, நங்காதற் குமரனுக்கே யெக்
காலும் அடிமைசெயும் நண்புளானே. (3)

கல்வியினிற் பேரறிவிற் கட்டழகி லிவன்போலக் காணோமென்றும், வில்
லலியிற் சங்கீதவித்தை தனிலிவன்போல வேறுரென்றும், தொல்லுலகிற் பற்
பலரிவ்வாறுரைக்க மகிமை பெறுந்துயோனெல்லாம், வல்லவனற் சீர்கொ
ண்ட தங்கவேற்சாமி யெனும் வள்ளலுனே. (4)

வெண்பா.

சுட்டுயர் வில்லாமன்றையின் ஒண்பொருளெல்லாமினிது, செட்டுமிசைகொ ண்ட பெருஞ்சீராளன், இம்பெரிய, தங்கவேற்சாமி தமிழ்வசனக் காந்தத்திற் செங்குன்றுடையா னின்று, (5)

சேலம்ஜில்லா டேங்கனிக்கோட்டை போர்ட் லோயர் சகின்டரிஸ்கூல் ஹெட்மாஸ்டர் கம. வே, சிவசுப்பிரமணிய வையரவர்கள்.

எண்சீர்கழி னெடிலாசிரிய விருத்தம்.

மறையுணர்ந்து மூளங்கேரு மாக்கரோடு மன்னுமவை யுணராரு மூய்யு மாறிங், கிறைபுகன்ற புராணங்க ளீரொன்பானி லீசற்கா வமைந்திட்டவீரை ந்தாகுக், திறற்சைவம் பவுடியமே பொற்புமிக்குந் திகழிலிங்க மார்க்கண்டங் காந்தமச்சம், அறலுலவுங் கூர்மமொடு வாராகம்மே யணிகுறட்டப்ரம்மாண்ட மென வரைவர் மேலோர். (1)

புரமூன்று மெரித்தோற்குப் பொருந்தி நிற்கும் புராணங்களீரைந்திற் புகழான் மேவுஞ், சிரமாறு தரித்தோன்றன் சரிதஞ்செப்புந் திறந்தெழிற்பல் பொருண்மிகுத்த காந்தந்தன்னை, வாமாருங் கச்சியப்பன் தமிழ்வாழ்ந்த வான் முனிவன் சம்பந்தன் முதலாவந்தோர், திரமாக விரி கொவையா வகுத்தா ரே னுஞ் சிறியோரு மெளிதுணரும் வகைத்தா னின்றே. (2)

அன்னகுறை தேர்ந்துவெளிற் றறிஞரோடு மறிவகலாச் சிறுவர்சிறு மியருந்தேரட், பொன்னருவி பொழிகிற்றென் றினியசொல்லாற் புகன்றனன் கந்தியமாப் புகழான் மிக்கோன், என்னினிய வேற்செம்மற் கெக்காலத்து மிடையகலா வடித்தொண்ட னெழிலனவேலன், தன்னையு குணமிக்கான் சேதுவேந்தன் தன்மருகன் கந்தவிலா சங்கொண்டோனே. (3)

உ

சிவமயம்.

வேலுமயிலுந் துணை.

ஸ்ரீ கந்தபுராணச் சுருக்கம்.

விநாயகர் காப்பு.

திகடசக்கரச் செம்முக மைந்துளான், சகடசக்கரத் தாமரை நாயக, னகடசக்கர விண்மணி யாவுறை, விகடசக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம். (1)

சுப்பிரமணியர் காப்பு.

மூவிரு முகங்கள்போற்றி முகம்பொழி கருணைபோற்றி, ஏவருந்துதிக்க நின்ற வீராறு தோள்போற்றி காஞ்சி, மாவடிவைகுஞ் செவ்வேள் மலரடி போற்றியன்னான், சேவலுமயிலும்போற்றி திருக்கைவேல் போற்றிபோற்றி 2

நூற் பயன்.

இந்திரராகிப்பார் மேலின்பமுற்றினிது மேவிச், சிந்தையினினைந்த முற்றிச் சிவகதி யதனிற் சேர்வ, ரந்தமிலவுணர் தங்களுடல் கெடமுனிந்த செவ்வேற், கந்தவேள் புராணந்தன்னைக் காதலித்தோது வோரே. (3)

வாழ்த்து.

வான் முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்கமன்னன், கோன்முறை யரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க, நான் மறையறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மை கொள்சைவநீதி விளங்குகவுலக மெல்லாம். (4)

சிவபெருமான்.

திருவந்த தொல்லைப்புவனத் தொடு தேவர்போற்றிப், பெருவந்தனை செய்த றிதற்கரும் பெற்றியெய்தி, யருவந்தனையு முருவத்தையு மன்றி நின்றா னொருவன்றனது பதந்தன்னை யுளத்துள் வைப்பாம். (5)

சிவசத்தி.

செறிதருமுயிர் தொறுந்திகழ்ந்து மன்னிய, மறுவறுமானிட மரபின்மேவியே, யறுவகை நெறிகளும் பிறவுமாக்கிய, விறைவிதன் மலரடி யிறைஞ்சி யேத்துவாம். (6)

வைரவக்கடவுள்.

பரமனை மதித்திடாப் பங்கயாசன, னொருதலைகிள்ளியே யொழித்தவானவர், குருதியுமகந்தையுங் கொண்டுதண்டமுன், புரிதருவடுகனைப் போற்றிசெய்குவாம். (7)

வீரபத்திரக் கடவுள்.

அடைந்த வியுண்டிடுமே மரர்யாவரு, முடிந்திட வெருவியே முனிவர்வேதிய, ருடைந்திட மாமகமொடியத்தக்கனைத், தடிந்திடு சேவகன் சரணம் போற்றுவாம். (8)

திருநந்திதேவர்.

ஐயிருபுராணநூலமைத்தோதியுஞ், செய்யபன் மறைகளுந் தெரிந்த மாயையரின், மெய்யறு ளுள்புகல் வியாதனீட்டிய, கையடிநந்திதன் கழல்கள் போற்றுவாம். (9)

திருத்தொண்டர்கள்.

அண்டரு நான்முகத்தயனும் மாலரும், கண்டிடவரியதோர் காட்சிக்கண்ணவா, யெண்டகு சிவனடி யெய்திவாழ்திருத், தொண்டர்தம் பதமலர் தொழுது போற்றுவாம். (10)

கலைமகளார் துதி.

தாவறு முலகெலாந்தந்த நான்முகத், தேவுதன் றுணைவியாச்செறிந்த பல்லுயிர், நாவுதோறிருந்திடு நலங்கொள்வாணிதன், பூவடிமுடிமிசைப்புனைந்து போற்றுவாம். (11)

உ

சிவமயம்.

வேலுமயிலுந் துணை.

ஸ்ரீ கந்தபுராணச் சுருக்கம்.

(வசனம்.)

க-வது உற்பத்தி காண்டம்.

விருத்தம்.

பாச நீக்கித்தன்பாற்படு நல்லரு, ளீசனல்குமியல் பெனவெய்தினோர்,
தேசுமாற்றிச்சிறந்த தன்மெய்யொளி, வீசுகின்றது வெள்ளியங்குன்றமே,

திருவருள் விளங்கும் ஒப்புவமை யில்லாத திருக்கயிலாயத்திற் பரயேஸ்வரி இடப்பாகத்தில் விளங்க வேதநாயகனாகிய* சிவபிரான் கொலுவிருக்குஞ் சமயத்தில் லோகநாயகியாகிய பராபரையானவள் மனதில் ஒன்றைநினைத்துத் திருமேனி நடுங்கச் சடுதியிலெழுந்து பரமசிவத்தின் பாதாரவிந்தங்களைச் சேவித்து ஓ நாயகனே! அடியேன் மனக்கவலை நீங்கும்படிக்கு அநுக்கிரகம் செய்யவேண்டும், அதாவது தேவரீரை இகழ்ந்த தக்கனிடத்தில் நான் பலநாள் வளர்ந்தது மன்றி அவன்பெண் என்னும் பொருள் உள்ள தாக்ஷாயணி என்னும் பெயரையும் பெற்றிருக்கின்றேன். ஆதலால், அந்தநாமத்தையும் அவனால் தரப்பெற்ற இந்த உடலையும் தாங்கி இருக்கப் பயப்படுகின்றேன், அக்கவலை நீங்கி நான் மகிழ்ச்சி யடையும்படிக்குக் கடாக்ஷிக்கவேண்

டுமென்று அன்பினால் எமது அன்னை விண்ணப்பம் செய்யக்கேட்டுப்
பரமேஸ்வரன், ஓ! சங்கரி! பர்வதராஜன் உன்னைப் பெண்ணாகப்
பெறவேணுமென்று நம்மைக்குறித்து அரிய தவங்கள் செய்திருக்கி
ன்றான். நீ அவனுக்குப் புத்திரியாகப் போய்ப்பிறந்து பின் நம்மைக்
குறித்துத் தவம்செய்தால் நாம்வந்து உன்னைக் கல்யாணம்செய்து கொ
ண்டு இவ்விடம் வருவோம் என்று திருவாய்மலர்ந்தனர். அவ்வண்ண
மே, அம்பிகை திருக்கயிலாயத்தை விட்டு இமயமலை வரையின்
சிகரத்திலுள்ள புஷ்பவகைகள் மலிந்த மதுரஜலத்தடாகத்தில் ஓர்
வெண்டாமரையைத் தொட்டிலாகக்கொண்டு அதிற் குழந்தையாய்
விளையாடியிருந்தாள். பக்கத்துச்சோலையில் தவம்செய்திருந்த பர்வ
தராஜன் அதைக் கண்ணுற்று அடங்கா மகிழ்ச்சியடைந்து குழந்தை
யை வாரி எடுத்துத் தனது தருமபத்தினியாகிய மேனையைக்கூவி நம
து அன்னைவந்தாள்! வந்தாள்! நமது தவம் இன்றைக்கு ஈடேறியது!
பிழைத்தோம்! பிழைத்தோம்! இந்த ஜெகன்மாதாவைப் போற்றிவள
ர்க்கக்கடவை! என்று கொடுக்க, அவள் பரவசத்துடன் கைகளிற்
பெற்று நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாய் வளர்ந்து
வருங்காலத்தில் அம்பிகைக்கு நான்காம்பிராயம் வந்துற்றது. அப்
போது லோகநாயகி தனக்கு அநுக்கிரகம் செய்திருந்த பரமசிவனைக்
குறித்துத் தவம் செய்ய நினைவுகொண்டு தனது பிதாவினிடம் இமய
வரைச்சாரலில் தனக்கு ஓர் தவச்சாலை இயற்றித்தரல் வேண்டுமென
க்கேட்டுக் கொண்டனள். பர்வதராஜன், நீ நினைத்தபடி முடிவதற்கு
இன்னம் சிலகாலம் போகவேண்டும், அதுபரியந்தம் எங்கள் பாவங்க
ள் தீர இவ்வீட்டில் இருக்கவேண்டுமென்று பரிவுடன் சொல்ல, அ
ம்பிகை பரமசிவத்தின் அருளைக் கொண்டு நான் முடிக்க இருக்கும்
தவத்தைத் தடைசெய்ய வேண்டாமெனப் பின் அவன்நிருமித்துக்
கொடுத்த தவச்சாலையை உற்றப்பாங்கிமார்களை ஏவலுக்கு வைத்
துக்கொண்டு மனதை ஒருவழிப் படுத்தித்தவம் செய்திருந்தனள்.
பார்வதியார் இவ்விதமாய்த்தவம் செய்திருக்கும்போது சூரபதுமனெ
னவன் பரமசிவ கடாக்ஷத்தினாற் பெற்ற ஆயிரத்தெட்டு அண்டங்களு
க்கு இறைவனாய்க் கொடுங்கோல் முறையாய் அரசு செலுத்தித் தே
வரை மிகவும் வாட்டி வந்தனன். அதுகாலையிற் கயிலாயத்திற் பூர்வ
ம் தாம்வேதத்தின் அந்தப்பொருளை அநுக்கிரகம் செய்த சனகர் சன

ந்தனர் சனற்குமாரர் சனாதனர் ஆகிய இந்நால்வருக்கும் பரமசிவன் மோனநிலையைக்காட்டி யோகத்தில் இருந்து விட்டனர். காரணாகிய கண்ணுதல் மௌனத்திருந்தமையால் தேவர்களும் அரம்பையர்களும் பூமியின்கண் இராநின்ற சர்வப் பிராணிகளும் காமவின்பக் குறிப்பினை வெறுத்திருந்தனர். இதுசமயத்திற் சூரபதுமன் குமாரனாகிய பானுகோபன் பொன்னுலகத்திற் படையெடுத்து இந்திரகுமாரனையும் மற்றத்தேவர்களையும் பிடித்துச் சிறையிலிட்டது மன்றி அவர்களைத் தகாதபணி விடைகளைச் செய்யச்சொல்லித் தொந்தரித்தான். தேவேந்திரன் சில தேவர்களுடன் தப்பி இமயவரைச்சாரலுக்கு ஓடி மறைந்து அவ்விடத்தில் இத்துன்பங்களை ஒழிக்கும் நோக்கமாய்ப் பரமசிவனைக் குறித்துத்தவஞ்செய்தான். பரமசிவன் அவனுக்குப் பிரசன்னமாகித் தேவராஜனே! வருந்தவேண்டாம். ஆதியில் தக்கன் நம்மை இகழ்ந்து செய்த யாகத்திற்கு நீங்கள் உடன்பட்டிருந்த பாதகத்தினால் இத்தனை வருத்தங்கள் நேர்ந்தன. அதுவும் நீங்குங்காலம் சமீபித்தது. இன்னும் சிலபோதில் நம்மிடத்து உதிக்கப்போகின்ற குமாரனால் உங்கள் துன்பங்கள் அனைத்தும் நீங்கிச் சுகத்தில் இருப்பீர்களென்று தேறுதல் சொல்லிப் பூதநாயகன் கயிலைக்கு எழுந்தருளினார். பின் இந்திரன் சந்திரசேகரன் வாக்கியத்தை நினைந்து நினைந்து களித்தவனாய்ப் பின் வருமாறு நினைக்கலாயினான். சிவபிரான் இப்போது சனகாதியருக்கு யோக சாதனையைக் காட்டி விருப்பை ஒழித்திருக்கின்றார். பராசத்தியாரோ இமயவரையில் தவஞ்செய்திருக்கின்றனள். இவர்கள் இருவரும் கூட்டுறவில்லாமற் குமாரன் எப்படித் தோற்றுவன்! இந்தச்சந்தேகத்தைத் தெரியவேண்டுமென்று துரிதமாய்த் தேவர்களுடன் தேவேந்திரன் படைப்பின் தொழிலின்றி மனைவாட்டியுடன் சிங்காதனத்தில் வீற்றிருக்கின்ற பிரமதேவரைக் கண்டு வணங்கிச் சூரன் கொடுமையையும், பரமசிவன் தனக்கு அநுக்கிரகித்துப்போன செய்தியையும் சொல்லி இனி நானும் தேவர்களும் பிழைக்கும் வகையைக் கட்டளையிடவேண்டுமென்று கேட்கப் பிரமன் இரங்கி, ஓ! இந்திரனே! அதற்குச் சில முயற்சிகளைச் செய்து முடிக்கவேண்டியதால் மகா விஷ்ணுவைக்கலந்து பேசிநடத்த வேண்டுமென நிதானித்துப் பிரமதேவர், தேவராஜன் சகிதம் மாதவனை அடைந்து வணங்கித் தங்கள் அபிப்பிராயத்தைச் சொல்லிக்கொள்ள, அப்போது முராரியானவர் சர்வப்பிராணிகளும் காமவலையிற்பட்டு இன்பமடைவதாகப் பஞ்சபுஷ்பபாணங்களைப் பிரயோகித்துத் திரிலோ

கங்களிலும் தன் அரசுசெல்ல விருக்கின்ற நமது புத்திரனான மன்மதனை வேண்டிப் பரமசிவனிடத்திற்கு அனுப்புவீராயின் அவன் முயற்சியினால் அரன் யோகத்தினை நீங்கிப் பார்வதியைக் கலந்து ஒரு குமாரனைத்தருவர் அவரால் உமது குறைகள் அனைத்தும் நீங்கிவாழலாம் என்றுரைத்தார். அப்போது பிரமன் மன்மதனை அச்சபை நடுவே வர நினைத்தமாத்திரத்தில் அங்ஙனம் அவன் வந்து தோன்றினான். பிரமன் அவனைப்பார்த்து ஓ! மன்மதா! நீ பரமசிவத்தின் பேரில் உன் பாணங்களைச் செலுத்தி அவர் நிலையைக்கெடுத்து விரகமுண்டாக்கிப்பருவதராஜ புத்திரியைக்கூடும்படி செய்வையே ஆனால் நாங்கள் எல்லோரும் க்ஷேமம் அடைவோம். ஆதலால் எங்கள் நிமித்தம் நீவிரைவிற் போகவேண்டுமென உரைத்த காரியம் செவிபுகாமுன்னம் அவன் உள்ளமெல்லாம் தகிக்கப்பட்டு வருந்திப்பின் மனத்திடம் செய்துகொண்டு பிரமனைக்குறித்துச் சர்வேஸ்வரனை எனது அற்பமாகிய பாணங்களை ஏவிச்செயங்கொள்ளப் போவேனாயின் இந்தப்பிராணனுடன் யான் மீண்டுவருவதுமுண்டோ! பற்றற்றபரம் பொருளை மயக்கும் விதம் யாது! அதைத்தவிர எனக்கு வேறேயாதும்கட்டளையிட்டால் நான் செய்யத்தயாராயிருப்பேன் என்று பலவிதங்களாக யாது எடுத்துச் சொல்லியும் பிரமனாதியர்கேளாததினாலே சித்தசன் இவர்கள் சாபத்தில் நாம் நசிப்பதிலும் பரமேஸ்வரனால் நாம் நாசமடைவது மேன்மை என்பதாகக்கொண்டு கயிலையங்கிரியை நோக்கிச் செல்வதாயினன். பிரமன் இந்திரன் முதலானதேவர்களும் சித்தசனுடையசெய்தி தெரியவேண்டுமென்று கயிலையங்கிரியின் ஓர் பாரிசத்தில் வந்தமர்ந்திருந்தனர். மன்மதன், காவல்கொண்டிருக்கும் நந்திதேவரின் அனுமதியின்பேரில் தேவாதிதேவனாகிய எமது கர்த்தன் மோனத்திருக்கும் தவத்தை நெருங்கிச் சிவனாதனைத் தெரிசித்தவுடன் பயப்பிராந்திகொண்டு சரீரம் வியர்க்க மனம்கலங்கிக் கரத்திற் பற்றிய தனுசுடன் கீழே விழுந்து மரணசோபத்தை அடைந்தான். இதனைப்பக்கத்தில் நின்ற இரதிதேவிகண்டு, நமது கணவன் மாண்டனனோ, என்செய்வேனென அவனை எடுத்துத் தனது மடியிற் கிடத்திமலர் விசிறியாற் சிறுகாற்றெழ வீசியகாலத்தில் அவன் சற்றுநேரத்தில் உணர்ச்சி உண்டாய்க் கண்களைத்திறந்து எழுந்து பிரிய நாயகியாகிய இரதிதேவிக்குத் தேறுதலை பலகூறித்தேற்றப் பின் மன்மதன் தனது மனதிற்கு மிகவும்தயிரியஞ் செப்பிக்கொண்டுவில்லை நேராகப்பிடித்துப்பரமன் இருதய கமலத்திற்குச்சரியாகக் குறிபார்த்துப் பஞ்சபுஷ்ப பாணங்

களையும் பிரயோகித்தான். அவைகளும்தமது வீரங்களைக்காட்டி அதி வேகமாய்ப் போய் கர்த்தன் தேகத்தில் தாக்கியமாத்திரத்தில் அவர் தம் அனல் விழியினைச்சற்றே திறந்து மன்மதனைப்பார்க்க அதிற்பெருகிய சுவாலை தாக்கி மன்மதன் உடல்கரிந்து தூளாயெரிந்து போனான். இரதிதேவியானவள் தனது ஆசைநாயகனுக்கு நேர்ந்ததைச்சகிக்காதவளாய்ப்பற்பலவாகப் பன்னிபன்னிப் புலம்பியிருந்தாள்.

இவைநிற்க,கீழ்த்திசை வாயிலினிடத்திற்சேர்ந்து பரமனைத்தெரிசிக்கக்காலம் பார்த்திருந்த பிரமனாதி தேவர்கள் தாம் அனுப்பிய மன்மதன் சாம்பலாய் எரிந்துபோன சங்கதிதெரிந்தவுடன் மனநிலை கலங்கிப் புத்திவானாயிருந்த ஒரு புத்திரன் சடுதியில் மாண்டவிடத்துப் பிதாவானவன் களைத்து வருந்துமாறுபோலத் துக்கசாகரத்தின் மூழ்கிவாடிப் பின் யாவரும் ஒரு முகமாய்ப் பெருமானைப் போற்றிவேண்டுவதே முக்கியமான காரியமென்று ஆலயக்கீழ்த் திசைக் கோபுரவாயில் முன்னம் கூட்டமாய் நின்று கல்லென்னும் ஓசையெழத்துதிப்பதாயினர். சிவபிரான் அவைகளைத்தமது திருச்செவியிலேற்று நந்திதேவரைக்கொண்டு அவர்களைத்தமது முன் வருவித்தகாலத்துத் தம்மைவணங்கி நின்ற தேவர்களை நோக்கி மனவாட்டத்துடன் நீங்கள் வருந்தி முறையிடுவதற்குக் காரணம் என்னவென்று கேட்டனர். தேவர்கள் வாய்புதைத்துச் சூரனின் கொடுமையினின்றும் எங்களை விடுவிக்கத் தேவரீர் முன் திருவாய் மலர்ந்தவண்ணம் கடாக்ஷித்தருள வேண்டுமென்று இரந்துகேட்டுக் கொண்டார்கள். அப்போது தேவதேவன் பிரமனாதியரிடத்திற் கிருபையுற்று ஓ! தேவர்களே! கலங்காதீர்கள்! உங்கள் கருத்தின் வண்ணம் முடிக்கக்கடவோம். இன்றுமுதல் விசனம் என்பதை மறந்துவிடக்கடவீர்கள். பார்வதியைத்திருக்கல்யாணம் செய்கின்றோம் என அநுக்கிரகம் செய்யத்தேவர்கள் மகம் மேருவைச்சேர்ந்து சிவபிரானை வழிபட்டிருந்தனர்.

அவர்கள்நீங்கியபின் ஓர்பாரிசத்தில் மனவருத்தத்துடன் காலம் பார்த்திருந்த இரதிதேவியானவள் லோகநாயகன் எதிரில்வந்து என் பிராணநாயகன் செய்த அபராதத்தினைப் பொறுத்தருளி அவரைப் பழயபடியேசிவந்தனாக்கிப் புருஷப்பிச்சை தரவேண்டுமெனக் கரங்களை நீட்டி இரக்கும்போது ஒப்பற்றபரமேஸ்வரன் அவளிற்கிருபைகூர்ந்து பெண்ணே! நீ புலம்பி வாடவேண்டாம். கௌரியினை இப்பவ

கூட்டங்களை வஞ்சித்துப்பிடிக்கும்படி வேடன் தனதுசிரத்தில் தழைகளைக் கட்டிக்கொண்டு போகும் விதம்போலிருக்கின்றது. எமது கர்த்தனை எவ்வாறவும் மதியாமற் புறங்கூறவல்லகடின சித்தத்தையுடையகள்ள வேடந்தரித்து வந்த மூதியனே! இவ்விடத்தைவிட்டுச் சீக்கிரம் அப்புறம் போய்விடக்கடவை யென்று பார்வதியார் பேசியகாலத்தில் கபடப் பிராமணர் அம்மையை நோக்கி நகைத்தவராய் ஓ! பெண்கள் அமுதமே! ஏன் அவசரப்படுகின்றனை உனது மங்களகுணங்களைக் கேள்வியாய் அதிக மையல்கொண்டு வந்த என்மனக்கருத்தைக்கேட்டறியாமற் புறம்பிற் போ போவென்றுசொல்வதென்னை! வெகு தூரத்திலிருந்து வருந்தி இவ்விடம் சேர்ந்தது வேதச்சடங்கின்படி உன்னைத் திருக்கல்யாணஞ் செய்து கொண்டுபோவதற்காகும் அது தெரியாதபடிக்குத் தூரத்துகின்றாயென்று மாயக்கோலம் பூண்டு வந்த சிவபிரான் சொல்லியதைப் பார்ப்பதியார் கேட்டமாத்திரத்திற் திருச்செவிகளை மூடிச்சகிக்கப் படாமையால் மனம் வருந்திச்சரீரம் துடிக்கத் துக்கித்தவளாய் இரக்கமற்ற இக்கிழப்பிராமணன் இவ்விடம்விட்டுச் செல்பவனாகவும் காணப்படவில்லை நாமேபோய்விடுவது நலமென்றெண்ணி மிருதுவாகிய திருவடிகள் நோவ வேகமாய் ஒரு மறைவிடத்தை நோக்கிச் செல்லுகின்றபோது பரமசிவமானவர் உமையவளது மனவுறுதி முதலியவைகளுக்குக் கிருபை உண்டாகித் தாம் கொண்ட கோலத்தினை மாற்றிச் சிவகணங்கள் முதலியோர் சூழ்ந்துபோற்ற ரிஷபவாகன ரூடராய்க் காட்சிதந்தார். இவ்வாறு பிறப்பிலியாகிய தம் கணவன் தோற்றியதைப் பராபரை தெரிசித்துப் பலதரம் பூமியில் விழுந்து சேவித்து அறிவீனளாகிய நாயினேன் பேசியகுறை யாடுகளைப்பொறுத்தருளல் வேண்டும் இறைவனே! என்று மிகவும் வருந்தி நிற்கப்பரமேஸ்வரர் களித்து நீ முன்னம் பேசியவைகளை நாம் தோத்திரங்களாகக் கொண்டனம். உன்னைத்திருமணம் செய்வதற்காக நமது பரிவாரங்களுடன் நாளையத்தினம் வருவோமென்று திருவாய்மலர்ந்தருளிப் பரமேஸ்வரன் மறைந்தனர். பருவதராஜன் இவைகளைக்கேட்டு அளவிலா ஆனந்தக்கடலில் ஆழ்ந்துதமதுபுத்திரியினிடம் வந்து இனி அரமனைக்குப் போவோமென்று அவளை அழைத்துவந்து சேர்ந்து களித்திருந்தனன்.

முதற்காரணக் கடவுளாகிய பரமேஸ்வரர் வெள்ளியங் கிரியினைச்சேர்ந்தவுடன் அகஸ்தியர் முதலிய சப்தரிஷிகளையும் வரவழைத்தனர்

அவர்கள் பரமன்முன் அதிவேகங்கொண்டு சென்று அடியோங்களுக்கு ஆகும் தொண்டினைக் கட்டளை யிடவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, நீலகண்டவன் அவர்கள்மேல் திருக்கண்சாத்தி நீங்கள் நமக்குப்பார்வதியை இத்தினமே திருமணமுடிக்கும் படியாகப் பேசி முடித்து விரைவில்வரக்கடவீரெனச் சப்தரிஷிகளும் மலையரசனுடைய பரிபூரண சம்மதத்தைத்தெரிந்து மீண்டு தேவ தேவனுக்கு அறிவித்துத் தம்பதிக்கு வருதி பெற்றுக்கொண்டனர்.

இப்பால் மலையரையனானவன் தேவர்கள். பணிவிடைகளை முடித்து வருபவனாகிய மயனை மனதில் நினைத்தனன். அவன் அரசன் முன் வந்து பணிந்து தொழில் யாது என வேண்டினன். பரமசிவனுக்கு உமையவளை திருக்கல்யாணஞ்செய்து த்ரவிருப்பதால் இம்மலைதனைச்சூழ்வர விருக்கின்ற நகரத்தினைப் பொன்னுலகத்திலும் மேம்பாடாக அலங்கரிக்கக்கடவை யென்று அரசன் சொல்ல, அவன் அவ்விதமே அற்புத அலங்கார முதலியவை செய்து அவனை மிகமகிழ்வித்தான். கிரிராஜன், பலகோடி தூதுவரை வருவித்து மகாவிஷ்ணு பிரமதேவன் தேவேந்திரன் முதலிய தேவர்களுக்குத் திருக்கல்யாண மகோற்சவ சம்பிரமத்தினை அறிவித்து வரக்கட்டளையிட்டான். ஸ்ரீ மகாலெட்சுமி சரஸ்வதி முதலியோர் பார்வதியை மேலாகஅலங்கரித்துத் தேவகன்னியர் சூழ மங்கலவாழ்த்துக்களைப் பாடிக்கொண்டிருந்தார்கள். அப்போது, மலையரையன் தனது சுற்றத்துடன் கயிலாயநாதனிடம் சென்று தாழ்ந்து திருக்கல்யாணத்திற்குக் கிருபை செய்து இமயவரையினிடத்திற்கு எழுந்தருள வேண்டுமெனப் போற்றி நிற்கக்காலகண்ட மூர்த்தி இத்தினமே இமயத்திற்கு வருகின்றனம், நீமுன்போய் ஜாக்கிரதையாயிருவெனத் திருவுளம்பற்ற அவன் விடைபெற்றுத் திரும்பித் தன்னகரை அடைந்து பரமசிவத்தினை எதிர்பார்த்திருந்தனன்.

இமயவான் சென்றபின் பரமசிவமானவர் பூதகணங்களும் சூழத் திருக்கயிலையைவிட்டு இமயகிரியினைச்சேர்ந்த காலத்துத் திருமணச் சம்பிரமத்தினைத் தெரிசிக்கும்பொருட்டு மேல் அண்டங்களினிடத்தடங்கியிருக்கின்ற புவனவாசிகளனைவரும் ஏககாலத்தில் அவ்விடத்திற் கூடியகாரணத்தாற் சுமைமிகுதிப்பட்டுப் பூமண்டலமானது தேவர்கள் வருந்த வடபக்கம் தாழ்ந்து தென்புறம் மிகவும் உயர்ந்

தது. அப்போது பரமசிவம் அகஸ்திய முனிவரை அழைத்து ஓ! குறுமுனியே! நீ தென் தேசத்தைச்சேர்ந்து பொதிகைப் பருவதத்தில் வசித்துத்தவஞ் செய்திருப்பாயாகில் பூமண்டலஞ் சமமாகிச் சவுக்கியமடையுமென்று சொல்லியகாலத்தில், அகஸ்தியர் மனம் வருந்தலைக்கண்டு கர்த்தன் நாம் நீயிருக்கும் பொதிகை மலையிற் பார்வதியுடன் எழுந்தருளித் திருமணக்கோலத் தெரிசனையைக் காட்டுவோமென அருள்செய்தனர். பின்கும்பமுனிரானவர் அதிசீக்கிரமாக நடந்து போகும்போதுமாயையின்திறம் பெற்றகிரவுஞ் சகிரியையும், தனக்கு நிகரில்லையென்று இறுமாந்திருந்தவிந்தகிரியையும் மங்கும்படிக்கு அடக்கி ரிஷிகளை வஞ்சித்துக்கொன்று தின்றிருந்த வில்வலன் வாதாவி என்னும் இராட்சதப் பாதகரையும் அதம்பண்ணினவராய்ப் பரிசுத்தமாகியகாவிரி நதியினைக்கமண்டலத்திலேந்திப் பொதியவரையைச் சேர்ந்து சிவபிரான் திருக்கோலத்தினை மனதிற் சிந்தித்திருந்தனர். அக்காலத்திற் சகலபிராணிகளும் மனக்களிப்படையும்படி வடபக்கமும் தென்பக்கமும் தராசுத்தட்டினைப்போலச் சமமாகநின்றது. இப்பால்மலையரையன் கட்டளைப்படிக்கு எமது இறைவியாகிய பார்வதியானவள் சகல ஆடம்பரங்களுடன் ஸ்ரீமகா லெட்சுமியின் கரத்தினைப்பற்றிக் கொண்டு சரஸ்வதிதேவி அருகில் அம்மையின் பெருமைகளைக் கொண்டாடிவரக் கல்யாண மண்டபத்தினைச்சேர்ந்து பிறப்பிலியாகிய பரமசிவத்தின் பாதாரவிந்தங்களிற் பணிந்து நிற்கும்போது ஸ்ரீமகாலெட்சுமியானவள், தாயே! லோகநாயகனிடப் புறத்தில் வீற்றிருப்பையென வேண்ட அவ்வாறே பரமன் எழுந்தருளியிருக்கும் சிங்காதனத்தில் தேவேந்திரன் முதலானவர்கள் ஜெப ஜெப வெனப் போற்றப்பராசக்தி யானவள் வீற்றிருந்தனள். அத்தருணத்தில் மலையிறைவனானவன் பார்ப்பதியாரின் திருக்கரத்தினைப் பரமசிவனது கரத்தில் வைத்து வேதசாகைகளை ஓதி ஐயனே! அடியேன் அரிதிற்பெற்ற இப்பெண் கொடியைமண தொருமித்துத் தேவரீருக்குப்பாரியாகத் தந்தேனென்று அத்தேவதேவோத்தமனைத்தனக்கு மருமகனாக நினைந்து தாராதத்தஞ் செய்து கொடுத்தான். சகலரும் மோட்சசாம்பிராச்சியத்தினைப்பெற்றவர்களைப்போல் அளவற்ற மகிழ்ச்சியில் மூழ்கிக்களித்திருக்கும் தருணத்தில் கணவனின்றித் துக்க சாகரத்தில் மூழ்கியிருந்த இரதிதேவியானவள் பரமசிவத்தின் திருமணக்கோலத்தினைத் தெரிசித்து, கர்த்தனே! அடியாளும் களித்திருக்கத்தக்கதாக மங்கிலியப்பிட்சை தந்தருளவேண்டுமென்று பிரா

ர்த்தித்த தக்ஷணமே பரமசிவத்தின் கிருபையால் மகாவிஷ்ணு முதலானவர் பிரமிக்கும்படியும் இரதிதேவியானவள் மகிட்சியடைந்து துள்ளும்படிக்காகவும் அச்சமையமவனிடத்திற்கரும்பு வில்லைக் கரத்திற் பற்றிக்கொண்டு "உம் உம்" என்று ஆர்ப்பரித்து அனங்கன் தோன்றினன். இவ்விதமாக வெளிவந்த உருவிலியானவன் பார்வதியாருடன் வீற்றிருக்கின்ற பரமேஸ்வரனது பொற்பாத கமலங்களை அடுத்துப் பன்முறைபணிந்து போற்றுகின்றபோது பரமசிவம் கிருபாநோக்கம் பாலித்துச் சித்தசனே! உன்மனைவிக்கு நான் அநுக்கிரகம் செய்தபடிக்கு அவளுக்கு மாத்திரம் நீ உருவாய் விளங்கி மற்றவர்களுக்கு அரூபியாக நின்று உன் பணிகளைச்செய்து வருவையெனத் திருவுளம்பற்ற அவன் தன் தேவியுடன் தனது இருப்பிடம் சேர்ந்து மகிழ்ந்திருந்தனன். பின் சிவபிரானனவர், சிங்காதனத்தைவிட்டிறங்கிச் சகலரும் சூழ்ந்து போற்ற ரிஷபவாகனத்தின் மீது ஆரோகணித்துத் தமது திருக்கரத்தினை நீட்டிப் பார்வதியாரை யெடுத்து இடப்புறத்திற் சேர்த்தணைத்துக்கொண்டு வாகனத்தை நடத்தி வெள்ளியங்கிரி மாளிகைப் புறத்தில் வந்தவுடன் மகாவிஷ்ணு முதலியோருக்கும் மலையரையன் முதலானவருக்கும் கிருபாநோக்கம் பாலித்து உங்கள் பதவிகளிற்சென்று சுகஜீவிகளாய் வாழக்கடவீர்களென்று திருவுளம் பற்றி உமையவளுடன் தமது அரமனையிற் பிரவேசித்துச் சபாமண்டபத்தில் நவரத்தின மயமாயிருக்கும் சிங்காதனத்தில் யதாப்பிரகாரம் தேவியாருடன் வீற்றிருந்தனர். பிராணிகளனைத்தும் சிவமும் சத்தியும் சேர்ந்த மகிமையினாற் காமவின்பம் மேற்கொண்டு போகங்களை அநுபவித்து ஆனந்தமடைந்திருந்தன.

பரமசிவன் பராசத்தியுடன் வீற்றிருந்தபின்பு பலகாலம் பிள்ளையைத்தராமற் சும்மாயிருப்பதைச் சூரபதுமன் உபத்திரவத்திற்கஞ்சி மகம்மேருச்சாரலில்வந்து ஒளித்திருக்கும் பிரமனாதி தேவர்கள் கண்டு பின்னும் ஓர்தரம் சிவபிரானை வேண்டிக்கொள்ளச் சமயம் பார்த்து வரும்படி திருக்கயிலைக்கு வாயுதேவனை யனுப்பினார்கள் அவன் மந்தமாருத அசைவால் மெல்லென்று கயிலையின் முதற்கோபுரவாயிலிற் பிரவேசிக்கச் சமீபித்தபோது நந்திதேவர் அதைத்தெரிந்து கோபங்கொண்டு சீறி அவனைப்பின் மன்னித்துவந்த வழியே போகவிட்டனர். அவன் மீளத்தாய் வயிற்றிற் பிறந்ததாக வெண்ணிப் பிழைத்தேமென்று பிரமனாதி தேவர்களை யடைந்து நந்திதேவரின் காவல்திறத்

ணைதச் சொல்லினன். பின் தேவர்களனைவோரும் வருத்தமடைந்து
திருக்கயிலாயத்திற்குச் சென்று ஆலயத்திற்கெதிரில் வீற்றிருக்கும்
நந்திதேவரைக்கண்டுபோற்றி எங்கள் துன்பங்கள் அத்தனையுந் திரு
வுள்ளத்திற் கொண்டிரங்கிச் சிவபிரானுக்கு எங்கள் வரவினைத் தெரி
வித்து விடைபெற்று வந்து எங்களைப் பரமன் திருமுன்பு விடவே
ண்டுமென்று வேண்டுவதற்கு நந்திதேவர் இரங்கி ஆலயத்துட்சென்று
சிவபிரானை வணங்கிச் சொல்லச் சிவநாதன் அவர்களை வரவிடக்கட
வை என்று திருவாய் மலர்ந்தவுடன் திரும்பி மகாவிஷ்ணுபிரமதே
வர் முதலிய தேவரைக்கண்டு அவர்களை நந்திதேவர் உள்ளேபோகும்
படிக்கு விடுத்தனர், பிரமனாதிதேவர் அனைவரும் பராசக்தி இடப்பா
கத்தில் விளங்கிச் சிங்காதனத்தில் வீற்றிருக்கின்ற எமது ஐயன் முன்
னைசேர்ந்து அவர் பொற்பாத கமலங்களிற் பன்முறை பணிந்தெழுந்
து பத்திவிசுவாசத்துடன் நிர்மலக்கடவுளே! ஒரு சற்புத்திரனை எங்கள்
துன்பம் நீங்கும்படிக்குச் சீக்கிரத்தில் தேவரீருக்கு ஒப்பாகப் படைக்
கவேண்டுமென்று பலதரம் வணங்கிக் கேட்டுக்கொள்ளப் பரமேஸ்
வரர் அவர்களிற்கிருபையுற்றுத் தமது பழைய கோலமாகிய சண்மு
கங்களுடன் தோற்றி எதிரிலிருக்கின்ற மகாவிஷ்ணு முதலாகிய தேவ
ர்களனைவரும் தமது மனத்திகிலிட்டு அற்புதத்தராய்க் கர்த்தன் கிரு
பையின் பெருக்கினை நினைந்து நினைந்து புகழ்ந்திருக்கின்ற காலத்தில்
தாம் வகித்திருக்கின்ற திருமுகங்களாறினும் பிரகாசித்திருக்கி
ன்ற நெற்றிவிழிகள் தோறும் ஒவ்வொரு அனற்பொறியினை உண்
டாக்கினர். அப்படிப்பிறந்த பொறிகள் ஆறும் அதிகுவாலைகளை
வீசிப்பூமண்டலம் அண்டகோளகை முற்றும் சரேலெனப்பரவியா
தொரு பிராணிகளையும் வதைசெய்யாமற் சராசரங்களைப்பயமுறு
த்தி அலைத்தன. அக்கால், ஞானநாயகனைத் தேவர்கள் வேண்டிக்
கொள்ளத்தாண்டவமூர்த்தியானவர் அவர்களுக்கு ஆதரவுசொல்லித்
தமது திருமுகங்கள் ஆறையும் மறைத்து யதாப்பிரகாரம் தமது திரு
முகம் ஒன்றினைத்தாங்கி அனற்பொறிகளைத் தமது திருமுன் வருவதா
கத் திருவுளத்திற் கொண்டனர். அவைகள் முன்போல் ஆறுபொறி
களாக உருக்கொண்டு சுவாலித்துவந்து தம் திருமுன் நின்றதை மகிழ்
ச்சியாகப் பரமன் பார்த்துப் பின் ஜெயசாலிகளாகிய வாயு அக்கினி
தேவர்முகங்களைநோக்கி நீங்கள் இருவரும் இந்த அனற்பொறிகளைத்
தாங்கிக்கொண்டு போய்க் கங்கையாற்றில விடுவீர்களெனக் கட்டளை
யிட அப்படியே அவர்களிருவரும் ஒருவர்மாற்றி யொருவராய் அவை

களைச் சிரசில் தாங்கிச் சகலதேவரும் தம்மைச் சூழ்ந்துவரக் கங்கையிற் கொண்டுபோய் விட்டனர். கங்கையானவள் அவைகளைச் சரவணப்பொய்கையினிடத்துக் கொண்டுவந்து சேர்த்தனள். இப்படிக்கு அருவாய் உருவாய்ப் பலவாய் ஏகமாய்ப் பரப்பிரம சொரூபமாகப் விளங்குஞ் சோதிப் பொறிகளானவை பின்பு ஒரு ரூபத்தினைக் கொண்டு உலகங்களனைத்தும் பிழைத்தற் பொருட்டுக் கிருபைவிளங்கும் ஷண்முகங்களையும் பன்னிருகரங்களையும் படைத்த ஒப்பற்றகுழந்தை வடிவங்கொண்டு விளங்கின. அக்குழந்தையை மகாவிஷ்ணு முதலிய தேவர்கள் அடங்காத மகிழ்ச்சிகொண்டு தெரிசித்துப்பின் கார்த்திகை முதலிய கன்னியர்களைத் தருவித்து ஓ! பெண்களே! எமது கடவுள் ஒரு குழந்தையைப்போல வடிவுகொண்டு இந்தச் சரவணப்பொய்கையிலிருக்கின்றனர். அவருக்கு உங்கள் கொங்கைகளிற் பெருகும் பாலை உண்ணக்கொடுத்து அன்பாகப்போற்றி வரக்கடவீர்களெனச் சொன்ன மாத்திரத்தில் அவர்கள் மகாபாக்கியமென்று இசைந்து குமாரதேவர் சமீபத்திற்போய் அதிகப்பிரியத்துடன் அய்யனே! அமுதுண்ண வாருமென்று தங்கள்கரங்களை நீட்டி அழைத்து வேண்டுமுன்னிலையிற் சண்முகங்களைக் காட்டி. ஒருதோற்றமாகக் காட்டியவர் ஆறுகுழந்தைகளாக நின்றனர். கார்த்திகைத் தேவியர் ஆறு உருப்பெற்று நின்ற முதல்வனைத்தங்கள் மார்பிலணைத்துக் கொங்கைகளிற் பெருகும் பாலினைஅவருக்குக் கொடுத்துப்பின் அவரைத்தாமரை மலராகிய தொட்டிலினிடத்தில் வளர்த்தி எமது கண்மணியே நித்திரைசெய்யும் என்றிவ்வாறு தாராட்டிப் போற்றிவரும்போது அவ்வன்னையர்களிக்க அக்குமரன்கிருபையுற்று அனேகம் திருவிளையாடல்களைச்செய்து வீற்றிருந்தனர். இனிநவவீரரும் இலட்சம் வீரரும் தோற்றிய பிரபாவம் பேசுவாம்.

பார்ப்பதியார் தம்மிடத்திற் பரமன் திருக்குமாரனைப் படைக்கவொட்டாமல் தேவர்கள் செய்தார்களெனக் கோபங்கொண்டு இந்திரன் பிரமன் விஷ்ணுமுற்றத்தேவர் முதலியவர்களுடைய தேவியருக்கு இத்தினமுதல் புத்திர சந்தானமில்லாமற் போகக்கடவரெனச்சபித்தனள். ஆதலின், தற்காலம் வரையில் முப்பத்து முக்கோடிதேவரென்றும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளென்றும் பேசவிருக்கின்றது.

பார்வதியார் பொறிகளின் சுவாலைக்கு முன்வெருவியோடிய காலத்து அவள் பாதச்சிலம்பினின்றும் கழன்று கீழேவிழுந்திருந்த நவமணிகளிற் பின் அம்மன்சுவாமியாரிடம் வந்துற்ற காலையில் அவள் திவ்ய சுந்தரவடிவமானது பிரதிபலிக்கலாயிற்று. நவமணிகளின் மூலமாகத்தோற்ற நின்ற உமையவளின் ஒன்பது திருவுருவங்களையும் பரமன் பார்த்தருளி வாருமென வழைத்தனர். நவசக்திகளும், உடனே உதித்து வெளிவந்தனர். அவர்கள் பரமசிவத்தின் ரூபலாவண்யங்களைப்பார்த்து மயல் கொண்டு உடனே கருப்பமுற்றனர். உமையவள் அதை யறிந்து சக்களத்திகளாகிய காரணத்தாற் கோபங்கொண்டு அச்சத்தியரைக் கருப்பங்களுடன் பலகாலம் இவ்வாறே இருக்கக்கடவீர்களெனச் சபித்தனள். பின்சுவாமி அம்பிகையை அவர்களுக்கு அருள்செய்யும்படி திருக்கண்நோக்க அவர்கள் அவள் அருள்பெற்று நாகரத்தினம் என்பவள் வீரவாகுதேவனையும், தரளவல்லி என்பவள் வீரகேசரி என்பவனையும், புஷ்பராகக்கன்னிகை என்பவள் வீரமாமயேந்திரனையும், கோமேதகப்பாவை என்பவள் வீரமாமயேச்சுரனையும், வைடூரியப்பாவை என்பவள் வீரமாபுரந்தரனையும், வைரமங்கை என்பவள் வீரராக்கதனையும், மரகதவல்லி என்பவள் வீரமார்த்தாண்டனையும், பவளவல்லி என்பவள் வீரராகத்தனையும், நீலவல்லி என்பவள் வீரதீரனையும் பெற்றார்கள். முன் அம்பிகை நவசத்திகளைச் சபித்தகாலையில் அவர்களுக்குப் பயத்தால் வியர்வை உண்டானதிலிருந்து இலட்சம் வீரர் பிறந்திருந்தனர். பரமன் இக்குமாரர்கள் அனைவோரையும் பார்த்துக் குமாரசுவாமிக்கு நீங்கள் படைத்துணையாக இருக்கக்கடவீர்களென அநுக்கிரகம் செய்தனர்.

அப்பால் சிவபிரானனவர் சரவணப்பொய்கையினிடத்து வளருகின்ற நமது திருக்குமாரனை இந்தத்திருக்கயிலாயத்துக்கு அழைத்துவரப்போவோமென்று பார்ப்பதியாரிடம் சொல்ல அவள் அதிக மகிழ்ச்சியாய்க் காலகண்ட மூர்த்தியுடன் ரிஷபவாகனத்தில் ஆரோகணித்து மகாவிஷ்ணு முதலானதேவர்கள் தங்கள் துன்பங்களெல்லாம் தீர்ந்ததெனக் கொண்டாடிப் பூதகணங்கள் சூழ்ந்து பன்மலர்களைப் பரமன் மீதிலிறைத்துத் தொடர்ந்துவர இமயபருவதத்திற் கருகிலுள்ள சரவணப்பொய்கைக் கரையைவந்து சேர்ந்து அறுவகைத் தோற்றத்தினைக் கொண்டு திருவிளையாடல் செய்திருக்கின்ற

குமார தேவரைப்பார்த்து மகிழ்ந்திருக்கின்ற சமயத்தில் பாலசுப்பிரமணியக்கடவுளானவர் தேவதேவோத்தமனையும் பிராட்டியாரையும் கண்டு முகமலர்ந்திருந்தனர். எமதிறைவன் உமையவளைப்பார்த்துப்பெண்ணே! உனது திருக்குமாரனை எடுத்துவரக் கடவை என்றனர். அவள் மனப்பூரிப்புடன் வாகனத்தை விட்டிறங்கிப் பொய்கையினிடத்துச் சென்று தமது பிள்ளைகளாகிய அறுவகைத் தோற்றங்களையும் கரங்களாற் சேர்த்து வாரியெடுத்து மார்பினிடத்தில் அணைத்துச் சண்முகங்களும் பன்னிருகரங்களும் விளங்கும் படிக்கான ஓர் உருவாகச் செய்தனள். இவ்வாறு கவுரியானவள் சேர்த்து ஒன்றுபடுத்திய தமது திருக்குமாரனைப் புத்திரவாஞ்சையினால் உச்சிகள் மோந்து கொஞ்சப்பார்ப்பதியாருக்குக் கொங்கைகள் விம்மிப்பால் பீறிட்டோடியது. பிராட்டியார் அதை இரத்தினக்கிண்ணத்திற் சேர்த்துப் புதல்வனுக்குப் பரிந்தன்னைக்கொடுத்தனள். பாலைத்தெவிட்ட ஊட்டுவித்து லோகநாயகியானவள் குமாரசுவாமியினை இடையிலெடுத்துக்கொண்டு போய்ச் சிவபிரானைச் சேவிக்கச் செய்தபோது பசுபதி ஆவலாய்த் தமது திருக்கரங்களை நீட்டிக்குமாரனையெடுத்து மார்பிற்சேர்த்து மூத்தாடி மகிழ்ந்து தமது பக்கத்தில் இருத்திக்கொண்டனர். பார்ப்பதி தேவியையும் பரமனானவர் கரத்தினைத்தாழ்த்தி யெடுத்து தமது இடப்புறத்திற் சேர்த்தனர். இறைவிக்கும் இறைவனுக்கும் ஊடேகுமார தேவரானவர் இரவு பகலுக்கு மத்தியிற் செல்கிற அந்திப்போதைப் போலவிளங்கினர். குமாரசுவாமியானவர் அவ்விதம் விளங்குவதைத் தெரிசித்த அனைவரும் நெருங்கிச்சூழ்ந்து கல்லென்னும் ஓசையெழப் புகழ்வதாயினர். சூரனது கொடுமைகளினின்றும் எங்களை யீடேற்ற வேண்டுமென்று தேவர்களொருபக்கம் பிரார்த்தித்து நின்றனர். பாலசுப்பிரமணிய தேவரைப்போற்றிவந்த பாக்கியவதிகளான கார்த்திகை மாதர்கள் அனைவரும் குமாரதேவரைப் பிரியமனம்வராமற் சிவபிரான் முன்னம் பூமியிற்படிய விழுந்து சேவித்து நின்றனர். அரவாபரணர் அவர்களுக்குக் கிருபையுற்று நீங்கள் இந்தக் கந்தசுவாமிக்கு முலைப்பால் கொடுத்துப்போற்றிவந்த படியினால் இக்குழந்தைக்கு உங்கள் பிள்ளை என்னும் பெயர்விளங்கக்கடவது. உங்களுக்கு உரியதினங்களில் இக்குமரனை வழிபட்டு விரதமிருப்போர் எத்தகையரேனும் அவர்கள் விரும்பியவரத்தைத் தந்து கடைசியில் அவர்களுக்குச்சாருப்பதவியையும் கொடுப்போம் என அநுக்கிரகம் செய்தனர்.

முன்பார்வதியார் கொங்கைகளில் அதிகரித்தொழுகிய பாலானது ஆற்றுப்பிரவாகம் போலோடிச்சரவணப்பொய்கையிற் பெருக்கெடுத்தபோது வேதங்களைமுற்றுமோதி அவற்றின் முடியினைத்தெரிந்த பராசர ரிஷிபிள்ளைகள் அறுவரும்நன்னெறிகளிற் பிசகிக் கொடிய காரியங்களைச் செய்யக்கண்டு மனம்பொறாமற்பெற்ற தந்தையர் சபித்த காரணத்தினால் மீனுருப்பெற்று அப்பொய்கையினிடத்து உலவிக்கொண்டிருந்தவர்கள் அந்நீரிற் பாய்ந்திருந்த பாலினை உண்டனர். உடனே அவர்கள் சாபவலியொழிந்து மச்சவுருவு நீங்கித்தமது பழய ரிஷிக்கோலங்களைக் கொண்டவராய்ச் சிவபிரானை வந்து பணிந்து நிற்க, அவர்களுக்கு அந்திவண்ணன் கிருபை கூர்ந்து, நீங்கள் இப்பருவதங்களில் தவம் செய்திருப்பீராகில் இன்னம் கொஞ்சக்காலத்தில் இக்குமரனே இம்மார்க்கமாக வந்து உங்களுக்கு அருள்செய்வனெனத்திருவாய்மலர்ந்தனுப்பினர். பின்சிவபிரான் மற்றத் தேவர்களனைவோர்களுக்கும் விடைகொடுத்தனுப்பித் தாம்கயிலாயத்திற்கு எழுந்தருளித் திருத்தேவியுடன் குமாரதேவர் மத்தியில் விளங்கச் சிங்காதனத்தில் வீற்றிருந்தனர்.

பின், குமாரசுவாமியானவர் தமது துணைவராகிய நவவீரர் இலக்கத்தவர்களுடன் கூடிக்கொண்டு ஒருவராலும் சாத்தியப்படாத மிக அற்புதமான பாலப்பருவத்துக்குரிய திருவிளையாடல்களைச் செய்து வருகின்றதருணத்தில் பராசத்தியானவள் அவைகளைப்பார்த்து அதிசயங்கொண்டு மகிழ்ந்தவளாய்ச் சிவபிரானை வணங்கிப்போற்றி இப்பாலகன்காரணங்களை எனக்குத் தெரிய அனுக்கிரகம் செய்யவேண்டுமென்று வேண்டப்பரமன் ஓ! உமைபவானி! குமாரதேவனைக் கங்கையேந்திச் சென்றமையாற் காங்கேயனென்றும், சரவணப்பொய்கையில் தங்கியதால் சரவணபவனென்றும், கார்த்திகைப்பெண்கள் பாலூண்டமையால் கார்த்திகேயனென்றும், அறுவகைப்பட்டிருந்ததை நீ ஒன்றுபடுத்தியதால் கந்தனென்றும், நமதுபுராதன முகங்களாறைப் பெற்றதனால் சண்முகனென்றும் திருநாமங்கள் அவனுக்கு விளங்குவதாயின. மேலும் தாரகப்பிரமத்தின் ஓசையானது ஆறெழுத்தாகத் தோன்றும் அவை ஒன்றுபட்டு உன்திருக்குமாரனது நாமத்திற்குரிய சடாக்ஷரங்களாகநின்றன. ஆதலால் ஆறுமுகன் நமது சத்துவத்தினைக் கொண்டிருப்பவன்; அவனுக்கும் நமக்கும் பேதகம் இல்லையென்று குமாரசுவாமியாரின் மற்றப்பெருமைகளனைத்தையும் விடாம

லெடுத்துரைத்த காலையில், அம்பிகையானவள், இப்படியாயிருக்கிறது இந்தப்பாலன் மகத்துவமென்று மனமகிழ்ந்திருந்தனள்

இவைநிற்க, குமாரதேவர் இன்னும் பல அற்புதத் திருவிளையாடல்களைச் செய்வதாய் நினைந்து அண்டத்தில் விளங்கும் சத்தகுலாசலங்கள் சத்தசாகரங்கள் புவனங்கள் அவைகளினுட் பட்டபிராணிகள் முதலாகக் கிரமங்கள் தப்பிமாறுபடச்செய்துகளித்தனர். இதனால் இந்திராதிதேவர்கள் இராக்கதரின் கொடியசெய்கைகளென மருளடைந்து அவை அறியும் காரியமாய் எங்கணும் உலாவி முகம்மேருகிரியைஉற்றகாலையில் அவ்விடம் ஓர்பால் அப்பருவத்தின் பொற்சிகரங்களை ஒடித்துத் திசாதிசைகளில் வீசிநிற்கின்ற குமாரசுவாமியார் செய்கைகளைக் கண்ணுற்றுப் பிரமித்தவராய் இதுவரையில் நாங்கள் கண்டமாறுபாடுளைச் செய்தவன் இவனையாவனெனக் குறித்துச் சகலரும் ஏகமுகமாய் அவரை வளைந்துகொண்டு சண்டைதொடுத்தனர். அதைகண்டு உமையவள் திருக்குமாரன் மனதிற் சிந்தித்து ஒப்பற்ற வில்லினையும் கொடிய பாணங்களையும் நிருமித்து யாவரையும் கணப்போதில் மடித்து நின்றனர். பின்தேவகுருவாகிய பிரகஸ்பதி பகவான் வந்து குமாரதேவரை வேண்ட அவர் சகலரையும் பிராணனைப்பெற்றெழுவதாகக் கடாக்ஷித்தனர். தேவேந்திரன் பின் தனது அறியாமையை மன்னிக்கக் குமாரதேவரைப் பன்முறைவணங்கிப் போற்றி அவருடைய அருளைப்பெற்றுப்பின் அக்கடவுளைத் தேவர்களனைவோர்களுடனும் சேர்ந்து அபிஷேக முதலியவை செய்து அர்ச்சித்துப் பலவரங்களைப்பெற்று மகிழ்ந்தனன். பின்குமாரக்கடவுள் திருக்கயிலைக்கு எழுந்தருளினர்.

இப்படியிருக்குங்காலையில், நாரத ரிஷியானவர் ஓர்யாகம் மந்திர வேறுபாடுகளினாற் செய்யநேரிட்டு அதினின்றும் ஓர்வெள்ளாடு பிறந்து ஜெகத்தை வருத்துவதாயிற்று. அதைப்பற்றி அம்முனிவர் முருகக்கடவுளை வந்துதொழுது விண்ணப்பம் செய்ய, அவர் வீரவாகுதேவரைக்கொண்டு அதைப்பிடித்து வரச்செய்து தமக்கு வாகனமாகக்கொண்டனர். பின்னொருகாற் சிவபிரான் சந்நிதானத்துக்குச் சென்ற பிரமதேவன் கோபுரவாயிலைத் தாண்டும்போது குமாரசுவாமியை அலட்சியமாக எண்ணிவணங்காமற் செல்ல அதை எம்பெரு

ரான் கவனித்தவராய் அவனைவரவழைத்துப் பிரணவத்திற்குப் பொருள்கேட்டனர். அது தெரியாததினால் தமது திருக்கரங்களினால் அவன் சிரங்களிற் குட்டிவிலங்கிட்டுச் சிறையிலிட்டுத்தாம் சிருஷ்டித்தொழிலை நடத்தியிருந்தனர் அத்தருணத்தில்மகாவிஷ்ணுவானவர் இச்செய்தியைத் தெரிந்து பிரமனை விடுவிக்கவேண்டுமென்று யோசித்துத்தேவர்கள் ரிஷிக்கூட்டங்கள் முதலானவர்களுடன் திருக்கயிலாயத்தைச்சேர்ந்து சபாமண்டபத்தில் வீற்றிருக்கின்ற ஒப்பற்ற ஞானநாயகனாகிய பரமசிவத்தினது திருவடிகளில் தாழ்ந்தெழுந்து பிரமனுக்கு நேர்ந்த சங்கடத்தினை முறையிட்டுக்கொண்டபோது தீனதயாபர மூர்த்தியானவர் கிருபையாய் நந்திதேவரைப் பார்த்து நீதுரிதமாய் நமது குமாரனிடம் போய் நமது கட்டளை யெனச் சொல்லிப் பிரமனைவிடுவித்துக்கொண்டு வாவென அனுப்பினர். நந்திதேவர் பரமனைச் சேவித்து விடைபெற்றுக் கந்தமாதனவரையைச்சேர்ந்து விளங்குகின்ற சண்முகப்பெருமானைக் கண்டவுடன் சேவித்துப்போற்றித்தான் வந்தகாரணத்தைச் சொல்லிமுற்றும் முடிக்குமுன்னம் குமாரசுவாமியார் கோபித்துப் பிரமன் சிறையினை நீக்கமாட்டோம் இதைக் குறித்து இங்கு நீ இன்னம் சிலநேரம் இருப்பையானால் உன்னையும் அரியகாவலிற் படுத்துவோம். துரிதமாகப்போய் விடக்கடவாயெனச்சீறிச்சொல்லிய போது நந்திதேவர் மறுமொழிபேசுவதற்கஞ்சி நமக்கும் என்னகெடுதி நேரிடுமோ என்று யோசித்துச் சீக்கிரம் திருக்கயிலாயத்துக்கு வந்து காலகண்ட மூர்த்தியைப் பணிந்து இன்று நான் பாலசுப்பிரமணியக்கடவுளைக் கண்டு தேவரீர் கட்டளையினைச் சொல்லும்போது அதை மறுத்ததுமன்றி என்னையும் சிறைப்படுத்துவதாகச் சொல்லினர். ஆதலால் மாறுபேசஅஞ்சி வந்து விட்டேன் என்றனர். சிவபிரான் திருநகைகொண்டு தமது திருமாளிகையைக்கடந்து ரிஷபவாகனத்தின் மீது சகலரும் புடைசூழ ஆரோகணித்துத்தமது திருக்குமாரன் வாசமாயிருக்கின்ற கந்தமாதனத்தைச் சேர்ந்து சண்முகக்கடவுள் எழுந்தருளியிருக்கின்ற ஆலயத்தின் முகவாயிலின் அருகில் வந்திறங்கி மெல்லநடந்து அதிகப்பிரியத்துடன் வருவதனைக்கண்ட குமாரதேவர் தமது பிதாவானவர் வருகின்றனரென்று துரிதமாய்ச் சிங்காதனத்தை விட்டிறங்கி எதிர்கொண்டு கர்த்தன் திருவடிகளிற் பணிந்து அழைத்துக்கொண்டு போய்ச் சிங்காதனத்தில் வீற்றிருக்கும்படி செய்து கரங்களைக் கூப்பிநின்று பிதாவே! தேவரீர் என்னைத்

தேடிவரவேண்டிய காரணமென்னே! திருவுளம்பற்ற வேண்டுமெனப்போற்றப்பரமசிவம் பரிவாய்ச்சொல்வதாயினர். ஐயனே! நீபிரமனைச்சிறைப்படுத்தி வைத்திருப்பதாகத் தெரிந்து அவனைவிடுவிப்பதாகக் கருதிவந்தனம். அவன் காவலை யொழித்து அனுப்பிவிடக் கடவாயென்றபோது குமாரக்கடவுள் வேதங்கள் முதலிய சகலத்துக்கும் ஆதாரசத்தியாகும் பிரணவத்தின் பொருளை அறியாதபிரமன் சிருஷ்டித்தொழிலை நடத்தத்தருந்தவனென்பது அசம்பாவிதம். இத்தகையவிவேக ஞானியனுக்கு இத்தச்சிறந்ததொழிலைக் கொடுக்கலாகுமோ? அவன் சிறந்த பூசனைகளைத் தேவரீருக்குச் செய்து வருபவனென்னும் தயவினால் இத்தொழிலை அவனுக்குக் கடாக்ஷித்தீர்! அதில் அவன் மமதைகொண்டவனாய் உயர்வுதாழ்வுகளை நிதானித்து நடந்துகொள்ளத்தெரியவில்லை. அவனைச்சிறையில் நின்றும் விடுவிக்கமாட்டேன். இன்னம் சிலகாலம் இருந்தால் அவனுக்குப் புத்திவரும் என்று திருக்குமாரன் சொல்லியபோது சிவபிரான் சிந்தித்து, இவனைப்பயமுறுத்தி னல்லாது இவன் வழிக்கு வரமாட்டானென்று தமது திருவுள்ளத்திற் கருதிக் குமரனே! உன்னடபடிக்கைகள் வெகு நேர்த்தியாக விருக்கிறது? முன்னம் நமது கட்டளையின்படி வந்த நந்திதேவரையும் பயமுறுத்தித் திருப்பி அனுப்பிவிட்டாய். இப்போது நாமே நேரே வந்தும் நீ அதை அலட்சியம் செய்து மறுத்துப் பேசுகின்றனை என்று கருணாநிதியாகிய சிவபிரான் கோபித்தவரைப் போற்கடிந்து சொல்ல, குமாரதேவர் இனித்தடை சொல்லக்கூடாதென்று பிரமதேவனை விடுவித்துக்கொண்டு வரும்படிக்கு தமது பரிசனருக்கு கட்டளை யிட்டனர். உடனே சிலர்ஓடி, ஒடுங்கிக்கிடக்கின்ற பிரமனை விலங்கினைப்போக்கி அழைத்து வரச் சிவகுமாரனவர் பிரமன் கரத்தினைப்பற்றி வந்து பரமேஸ்வரர் சந்நிதானத்தில் விட்டனர். பிரமன் பரமன் திருவடிகளிற் பணிந்து போற்றி அதிகமானமும் வெட்கமும் மனதை வாதிக்கத் தலைகவிழ்ந்திருந்தனன். கர்த்தன், பிரமனை நோக்கி அதிகம் வாடி வருந்தினையோ எனத்திருவாய் மலர்ந்தனர். பிரமன், தேவரீர் திருக்குமாரர் எனக்குச்செய்த இந்தத் தண்டனை சரியானதுதான். நான் எக்காலத்தும் கருவமடையாமற் புனிதனுமானேனென்று சொல்லியபோது சிவபிரான் கிருபையுற்றுப் பிரமனே! நீமுன்போல் உனது சிருஷ்டித்தொழிலை நடத்தியிருப்பாயெனக் கட்டளையிட்டனுப்பினார். பின்பு, கர்த்தன் முருகக்கடவுள் திருமுகத்தினை நோ

சி, ஐயனே! சமீபத்தில் வருகவென்றழைத்து அங்ஙனைத்தழுவியெடுத்துத்தம்து தொடைமீதிலிருத்தி அப்பனே! ஓங்காரப்பொருள் உனக்குத்தெரியுமோ? அதனை இப்போது எனக்குச்சொல்லக் கடவாய் என்றபோது, குமாரதேவர், ஆதிகர்த்தனே! பார்ப்பதியாருக்கு முன்னம் தேவரீர் யாவருக்கும் தோற்றுதபடிக்குப் போதித்திருக்க நான் என்ன சொல்லப்போகிறேன் என்று சொல்லச்சிவபிரான் நகைத்துக் குமாரனே! அப்படியே நமக்கு இரகசியமாகத் தெரிவிக்கக்கடவையென்று தமது திருச்செவியினைத் தாழ்த்தியபோது சண்முகதேவர் ஒப்பற்ற பதத்தின் நிச்சயத்தினைத் தெரிவித்தனர். அதைக்கேட்டவுடன் பரமேஸ்வரர் அதிக மனமகிழ்ந்தவராய் அத்தலத்தில் தலைமைபெற்று விளங்கும்படிக்குத் தமது திருக்குமாரனுக்கு அநுக்கிரகம்செய்து பரமனானவர் பழையபடிக்குத்தமது திருக்கயிலையினை அடைந்து, வந்ததேவர்களுக்குச் செலவு கொடுத்தனுப்பித் தமது திருமாளிகையிற் போய் அமர்ந்தனர்.

அத்தருணத்தில், அகஸ்தியர் இந்தச் சமாசாரங்களைக் கேள்விப்பட்டுக் கந்தமாதனம் வந்து கந்தசுவாமியைக் கண்டு போற்றி வேண்டி நிற்க, குமார தேவரானவர் பிரணவப்பொருளின் நிச்சயத்தையும் ஆறு சாஸ்திரங்களின் மகிமைகளையும் அய்யந்திரிபற அவருக்கு உபதேசித்தருளினர். அப்போது அகஸ்தியர் சித்த சமாதானம் அடைந்து கந்தசுவாமியை வணங்கி விடைபெற்றுத்தமது இருப்பிடம் சென்று மகிழ்ந்திருந்தனர்.

இவ்விதம் சுப்பிரமணியக்கடவுள் அற்புதங்கள் விளங்க விருக்கும்போது ஓர் சமயம் அவர் தமது பிதாவாகிய சிவபிரானுடைய சந்நிதானம் செல்வதாகக் கருதி கந்தமாதன பர்வதத்தை விட்டுப் புறப்பட்டு வந்தனர். அந்த மார்க்கத்தில் மகாவிஷ்ணுவின் புத்திரிகளாகிய சுந்தரி அமுதவல்லி என்னும் இரண்டு பெண்கள் தம்மைக் குமாரக்கடவுள் பத்தினிகளாகக் கொள்ளவேண்டுமென்னும் கருத்துக் கொண்டு சரவணப் பொய்கைக் கரையில் தவம் செய்திருந்தார்கள். சுவாமியானவர் அதை அறிந்து அவர்கள் பேரிற் கிருபையுற்று அவர்களை நோக்கி அமுதவல்லியே நீ போய்த் தேவேந்திரனுக்குப் பெண்ணாக வளரக்கடவாய்; சுந்தரியே நீ போய்ச் சிவமுனி புத்திரியாக அவ

தரித்து வேடர்கள் மூலமாய் வளர்ந்திருக்கக்கடவாய், நாம் சமீபத்தில் உங்களைத்திருக்கல்யாணஞ்செய்து கொள்வோம் எனத்திருவாய்மலர்ந்து பின் தமது மாதாபிதாக்களை வந்தடைந்து அவர்களைப் பலதரம் வணங்கி நின்றனர். அவர்கள் இருவரும் அவரை மகிழ்ந்தெடுத்து ஆசனத்திலிருத்திய காலையில் பிரமன் விஷ்ணு தேவேந்திராதியர்கள் சூரனுடைய கொடுமைகள் சகிக்கலாகாதென அங்குவந்து பரமனை வேண்டிக்கொண்டார்கள். அப்போது பரமசிவன் தமது ஒப்பற்ற திருக்குமாரனைக் குளிர்ந்த பார்வையுடன் நோக்கிக் குழந்தாய்! நீ தான் அந்தச் சூரன் என்பவனை வேறுடன் நிர்மூலம்பண்ணத் தக்கவனென்று திருவாய்மலர்ந்து அவருக்கு அஸ்திரங்கள் முதலியவை கொடுத்து ஆசிகூறி நவவீரர்கள் இலக்கத்தவர்களுடன் தேவர்களும் படைத்துணையாகச் சூழக் குமாரதேவரையுத்த சன்னத்தராய் அனுப்புவதாயினர்.

இவர்கள் குமாரதேவர் கட்டளைப்படிக்கு வீரவாகுதேவரைத் தமக்குத்தலைவராகக்கொண்டு சூரபதுமன் சகோதரனாகிய யானைமுகத்தையுடைய தாருகன் வாசஞ்செய்யும் மாயமாபுரத்தைக் குறித்துச் சென்று அதனுட்பிரவேசித்து அவ்விடம் எதிர்த்த அவுணவீரர்களை வளைந்துக்கொடியபோர்செய்து அனேகரைமடித்தனர். அதுகண்டு தாருகன் கடுங்கோபத்துடன் சண்டைக்கு வெளிவந்து பூதப்படைகளை மிகவும்மடித்து எதிர்த்துவந்த இலட்சத்தவரைத்தனது துதிக்கையாற் பற்றிக்கடலிற் போய்விழ வீசினன். நவவீரரில் ஒருவனாகிய வீரகேசரியென்பவன் அந்த அவுணன் கிரீடத்தைப் பாணத்தாற் கீழேவிழவீழ்த்தினன். அரக்கன் தனக்கெதிர்ப்பட்ட மற்றொருவீரனாகிய வீரகேசரியென்பவனுடைய மார்பில்தனது வயிரத்தண்டத்தைக்கொண்டுபலமாகச்சாடி அவனைமூர்ச்சிக்கச்செய்தான். வீரவாகு தேவர் ஆர்ப்பரித்து எதிர்த்துவந்த காலையில் தாருகன் முத்தலைச் சூலமொன்றுவிட்டு அவரைமயங்கும்படிசெய்து விட்டான். பின்வீரவாகு தேவர் மூர்ச்சை தெளிந்துஎழுந்து அவுணக்கொடியோன் மேற்பிரமாஸ்திரத்தைவிட அதைஅவன் வென்று மாயையின்பலவித வுருவங்களெடுத்து மயக்கத்தைத்தருவதாயினன். தேவரானவர் வீரபத்திரப்படையைத் தம் கரத்திலெடுக்க மாயந்தோற்றம் விலகியோடியது. அவுணராஜன் பக்கத்திலிருக்கும் மாயைக்கிருப்பிடமாகிய கிரவுஞ்

சகிரியினுள் ஓட்டம்பிடித்தான். அவனை வீரவாகுதேவர் தொடர்ந்து சென்று அக்கிரியினுள் வழியொன்றுந் தெரியாமல் மயங்கிவிழுந்து விட்டனர், மற்றவீரர்களும் சயினியங்கள் சகிதம் அம்மலையுள் தேவரைப் பின்பற்றிச் சென்று அவர்களும் பிணம்போலானார்கள். அது சமயத்தில் அவுணராஜன் மலையின் உச்சியிற் கிளம்பி வந்து மீதப் பூதப்படைகளை அஸ்திரங்களால் மடித்துப் பலரை நாலுதிசைகளிலும் ஓடச்சாடினன்.

இவைகளை நாரதமுனிவரானவர், தெரிந்து சகியாதவராய்க் குமாரசுவாமியாரிடம் உடனே வந்து சேவித்து விண்ணப்பஞ் செய்தனர். மகாகிருபையோடுங்கூடிய எமது பாலசுப்பிரமணியக் கடவுள் அதிசீக்கிரமாகத் தாருகன் முன்வந்து தோன்றினர். அவ்வவுணனுக்குச் சிவகுமாரன் தெரிசனையினால் ஞானோதயமாகி அப்பால் அவருடன் யுத்தம் செய்வதாய் ஆரம்பஞ் செய்து விட்டான். குமாரசுவாமி உடனே அவனது வில்லை இரண்டாக ஒடித்து மற்றொரு வீரவாளியால் அவன் துதிக்கையையும் இருகொம்புகளையும் கீழேவிழ அறுத்துத் தள்ளினர். அவன்கோபங்கொண்டுசுவாமியின் விருதக்கொடியை ஒரு பாணத்தால் வெட்டித்தள்ளிச் சாரதியாக வந்த வாயுதேவனையும் மற்றொரு பாணத்தாற் காயப்படுத்தினான். சுவாமியானவர் மற்றோர் பாணத்தை விட்டு அவன் நெற்றியிற் பட்டு உருவிப்போகச் செய்தவுடன் அவன் தேர்த் தட்டில் மயங்கி விழுந்தான். பின் குமாரசுவாமியானவர் அவன் சேனைகளை வளைத்துப் பாணங்களினாற் சின்னபின்னப்படுத்தியபோது அவுணன் மூர்ச்சைவிட்டுக் கிளம்பித் தனியாய் நின்று நாராயணாஸ்திரம் பிரம்மாஸ்திரம் முதலிய தகுந்தவைகளை விட அவைகள் சுவாமிக்கு யாதொரு தீங்கும் இயற்றா வண்ணம் வந்து நின்றன. பின் பாசுபதாஸ்திரம் விட்டான். அதைக் கந்தசுவாமியார் கொடுத்தவன் மறுபடி வாங்குமாறு போலத்தமது கரத்திற்பற்றினர். கொடிய அரக்கன் குமாரசுவாமியினுடைய திறங்களுக்கு அதிசயித்துப் பக்கத்திலிருக்கும் கிரவுஞ்சகிரியின் உதவியைக்கொண்டு மாயவிதங்களைக் காட்டிச் சுவாமியை மயக்கலாயினான். உடனே கடவுளானவர் தமது ஒப்பற்ற வேலாயுதத்தினை யேவித் தாருகன் மார்பினையும் கிரவுஞ்சகிரியினையும் பிளந்து மயக்குற்றிருந்த வீரவாகு தேவர் முதலியோரையும் மீட்டுத்தமதிடம் வருவித்துக்கொண்டனர்.

தேவர்கள் புஷ்பமாரி தூர்த்தனர். தாருகன் சண்டையில் மாண்டு கிடக்கின்ற மற்றப் பூதவீரர் அனைவரும் நித்திரையினின்றும் எழுந்தவரைப்போலக் கிளம்பிவந்து முருகேசனைப்பணிந்து நின்றனர். தாருகன் முன் தம்மீதுவிடக்கரத்திற் கொண்டிருந்தபாசுபதாஸ்திரத்தைக் குமரக்கடவுள் வீரவாகு தேவருக்குக்கொடுத்துப் போர்விடங்களிலெங்கும் நீ வெற்றிபெற்று வரக்கடவை என அனுக்கிரகம் செய்தனர்

பின் குமாரதேவனானவர் சமர்க்கள வெல்லையைக் கடந்து களித்திருக்கும் தேவர்களுடனும் பூதச்சேனைகளுடனும் பலதேசங்களைக்கடந்து இமயகிரியினைத் தாண்டித் தென் தேசத்தை நோக்கி நடந்து சூரியன் அஸ்தமான சமயத்தில் தேவகிரி என்னும் பருவதத்தைச் சேர்ந்தனர். ஆங்கு மகாவிஷ்ணு முதலியதேவர்கள் சிவகுமாரனை வணங்கிக் கர்த்தனே! எங்கள் நீடித்த கிலேசம் தீரத்தாருகனையும் கிரவுஞ்சத்தையும் பிளந்தீர். அடியோங்கள் தேவரீரை அருச்சித்து வழிபட விரும்புகின்றனம். அதற்குக் கடாக்ஷிக்கவேண்டுமென்று பிரார்த்தித்துக் கொள்ள குமாரசுவாமியார் உங்கள் கருத்தின் வண்ணம் செய்யுங்களென்று திருவாய்மலர்ந்து பக்கத்தில் தொழுது நிற்கும் தேவதச்சனை குறித்துச் சிற்பாசிரியனே! நாம் அனைவரும் வாசம்செய்யத்தக்க ஒருநகரத்தினை இங்கு துரிதமாய் அமைத்து முடிக்கக்கடவை எனப் பணிந்தனர். சிற்பியானவன் சுவாமி! இதோ முடித்தேனெனச் சீக்கிரம் ஒரு விசாலமாகிய நகரத்தைச்சகல வளங்களுடன் நிருமித்து அதனிடத்திற் பால சுப்பிரமணிய தேவர் வாசஞ்செய்யத்தகுந்த ஆலயமொன்றினையும் அமைத்து குமாரசுவாமியாரை வந்து பணிந்து நின்றனன். வெற்றிவேற் கடவுள் சகலருடன் அந்நகரத்துட் பிரவேசமாகி அங்குள்ள தமது ஆலயத்துள் நவவீரர் இலட்சத்தவருடன் சென்று சிங்காதனத்தில் வீற்றிருந்தனர். அது சமயத்திற் பிரமனும் தேவர்கள் குமாரசுவாமிக்குத்திருமஞ்சனமாட்டிச் சொர்ணப்பட்டாடையைத் தரித்துச் சகஸ்திர நாமங்களைப் பாரிஜாதபுஷ்ப விதங்களால் அருச்சித்துத் தண்டமாலையையும் திவ்யபரிமளக்கலவைகளையும் சாத்தி இரத்தினாபரணங்களை அணிந்து பலவகைகள் முதலிய நைவேத்தியங்களைச் செய்து கற்பூர நிராஞ்சனம் முடித்துத் தீர்க்க தண்டஞ் சமர்ப்பித்தும் [illegible] இவை நிற்க.

தாருகாசுரன் மாண்டதை இராட்சததூதர் ஓடி மாயாபுரியைச் சேர்ந்து அவன் இராஜ பத்தினியாகிய சவுரிக்குத் தெரிவிக்க அவள் நிலத்தில் விழுந்து அலறிப் புலம்பும்போது தாருகனுக்கு உரிய மற்றத் தேவிமார்கள் அச்செய்தியைத் தெரிந்து பரந்துவந்து மூத்தவளாகிய சவுரியைக் கட்டிக்கொண்டு பிரலாபித்துப் பின் அவர்கள் அனைவரும் பட்டணத்தைக்கடந்து இரணக்களத்தில் வந்து தங்கள் கணவன் அலங்கோலமாக விழுந்து கிடப்பதனைக்கண்டு அவன்மேல் விழுந்து அழுது புலம்புவதானார்கள். தாருகன் குமாரன் அசுரேந்திரனென்பவன் பிதாவுக்கு நேர்ந்ததைக் கேள்விப்பட்டு இரணக்களம் வந்துபலவாறாகப் புலம்புவதாயினன். சவுரியென்பவள் தன்குமாரனைப்பார்த்து என்புருஷனுடன் நான்போவதற்குச் சீக்கிரம் வேண்டிய ஏற்பாட்டைச் செய்துமுடிக்கக்கடவாயென்றாள். அசுரேந்திரன் என்னை வேண்டி நீஇருக்கவேண்டுமென்று எவ்வளவோ சொல்லியும் அவள்கேட்காமல் கடைசியில் அவனால் விசாலமாக வளர்த்திக்கொடுக்கப்பட்ட அக்கினிக்குழியில் தன்பிராணநாயகனுடனும் மற்றத்தேவிமார்களுடனும் பிரவேசமாகிவிட்டாள். அசுரேந்திரன் கிலேசத்துடன் மயேந்திரபுரியைச்சேர்ந்து சபாமண்டபத்தில் விளங்கும் சூரபதுமனைக்கண்டு ஓ! வெனப்புலம்பித்தேவேந்திரன் தந்திரவஞ்சகத்தினால் சிவகுமாரனென்பவனை உடன்படுத்த இப்போது அப்பாலனால் தாருகன்மாண்டனன் கிரவுஞ்சமும் வெற்றிவேலாற் பிளப்புண்டதென்று கதறிச்சொல்லச் சூரன் இது சுத்தப்பொய்யான விஷயம் என்று பிற்பாடு நிசத்தைத்தெரிந்து அடங்காத துக்கத்தையும் கோபத்தையுங்கொண்டு தானே அந்தக்குழந்தையுடன் நேரே சண்டைசெய்து அவனைச்சேர்ந்தவர்கள் அனைவரையும் நாசப்படுத்தி வருவேனெனப் புறப்படுவதாயினன். அப்போது அமோகனென்னும் மந்திரியானவன் தேவரீர் சிறுகுழந்தையின்பேரிற் கோபித்துப் போருக்குச்செல்லல் புகழுக்குரியதன்று இன்னம் வேவுகாரர்களை அனுப்பி அச்சிவகுமாரன் விஷயங்களை ஆராய்ந்துகொண்டு பின் அதற்குத் தக்க ஓர் ஏற்பாட்டைச்செய்து வெற்றியடையலாமெனச் சூரன் அப்படியே அறிந்துவரச்சாரணர்களை அனுப்புவதாயினன். இவைநிற்க.

தேவகிரியில் வீற்றிருந்த சண்முகப்பெருமானானவர் சூரியன் உதயமானவுடன் அணைநீங்கிச்சகலரும் சூழநடக்கத் தோத்ரம், கூறி

ஸ்ரீசயிலம், சுவாமிமலை, திருவேங்கடமலை, காளத்திமலை, திருவாலங்காடு, காஞ்சிபுரம், அருணாசலம், திருவெண்ணெய் நல்லூர், திருமுதுகுன்றம், சிதம்பரம், இவைகளை முறையே வணங்கிப் போற்றிக் காவிரி நதியினைக்கடந்து அதன் வட பாரிசத்திற் பெருகும் மண்ணியாற்றங்கரையில் வந்துசேர்ந்தனர்.

மகாவிஷ்ணு முதலியோர் பாலசுப்பிரமணியரைத் தொழுது இத்தகையவிடம் கிடைப்பது மிகவரிது. ஆதலால் இன்றிரவு இங்கு தங்கியிருக்கவேண்டுமெனப் பிரார்த்தித்தனர். சரவணபவன் விஸ்வகர்மனைக்கொண்டு யாவருந்தங்கும்படிக்கானநகரம் ஒன்றுஉண்டாக்கும்படி செய்து அதில் இனிதுவிற்றிருந்தனர். பிரமதேவர் அப்பதிக்குத் திருச்சேய்ஞாலூர் என்னும் பொருத்தமுள்ளபெயரை இட்டார்கள். அதுசமயத்தில் இந்திரனானவன் சிவகுமாரனிடம் விடைபெற்று வெளியேறி உலாவியிருக்கும்போது சீகாழியைச் சூழ்ந்த வனத்திலிருக்கும் தேவதைவந்து தன்வசத்தில் ஒப்பிவித்திருந்த ஆபரண பெட்டியைக் கொண்டுவந்து மகபதியினிடம் கொடுத்தது. அவன் அதைவாங்கித் தனது நாயகி அணியாநின்ற பூஷணங்களைக் கண்ட மாத்திரத்தில் அவள்பேரில் அடங்காத மையல்கொண்டு தன்பரிசனரைப் பார்த்து இந்தநகைப்பெட்டியை நீங்கள் பத்திரமாக வைத்திருக்கக்கடவீர்களெனக் கட்டளையிட்டுப்பின் குமாரசுவாமியாரைக் காலையில் வந்துபணிந்துநிற்கக் காங்கேயன் தேவராஜனே! சிவநாதனை நாமிக்கு பூசிக்கவேண்டியதாயிருப்பதால் அதற்கு வேண்டும் உபகரணங்களைத் தருவிப்பை எனக்கட்டளையிட்ட மாத்திரத்தில் அவன் அப்படியே சேகரித்துப்பணிந்து நின்றனன், சரவணபவன் தேவதச்சனால் ஒருஆலயத்தை நிருமித்து அதிற்சிவலிங்கத்தைப்பூசித்து மும்முறை பணிந்தெழுந்த காலையிற் சிவபிரான் தோற்றி உனது பூசனைவழிபாடுகளுக்கு மிகமகிழ்ந்தனம் என்று ஒருமகத்தாகிய பாசுபதாஸ்திரத்தைத் தந்து மறைந்தனர். பின்சிவகுமாரன் அவ்விடம் விட்டுத் திருநெல்வேலியையும் திருவாரூரையும் தெரிசித்துக்கொண்டு கொல்லனுலையிற் காயப்பட்டுச் சிவந்திருக்கும் இரும்பைப்போல அழன்றிருக்கும் பாலைநிலத்திற் பிரவேசித்தபோது மின்னலிடிகளுடன் மேகங்கள் இடைவிடாமல் வருஷித்துப்பின்பு அது குளிர்ந்து விளங்கியது அதைத்திருப்பரங்குன்றச்சாரலில் தவம் செய்திருந்த பராச

சிசுகுமாரராகிய அறுவரும் ஞானயோகத்தில் தெரிந்தவர்களாய்க் கர்த்தனை வந்து கன்காரரக்கண்டு வணங்கி நிற்கத்தேவேந்திரன் அவர்கள் முன்சரவணப்பொய்கையில் மீன்பிடித்து விளையாடினமைக்காக அவர்களின் தந்தையாரால் மீன்களாய்ப் போகும்படிக்குச் சாபம் பெற்று அப்பொய்கையில் இருந்தசமயத்திற் பார்ப்பதியாரின் திருமுலைப்பாலை உண்ணக்கிடைத்த மகிமையினால் இவ்வுருவம் பெற்றார்களென விபரமாய்க் குமாரதேவருக்கு அவர்களுடைய சரித்திரத்தையெடுத்துரைக்க வேலாயுதமூர்த்தியும் அவர்கள்பாற் கிருபையாய்த் தம் கூடவரும்படிக்குக் கட்டளையிட்டனர். அப்பால் வேற்கடவுள் திருச்செங்குன்றூரைத் தெரிசித்துத் திருச்செந்திற்பதியிற்பிரவேசித்தவுடன்தேவதச்சனைக்கொண்டு அவ்விடத்தில் திவ்வியமானநகரமொன்றினை அமைத்து அதில் அனைவோரும் தங்கியிருக்கும்படிக்குச்செய்து தாம் தமக்கு அங்கு ஏற்படுத்தியுள்ள மாளிகையில் அனைவருடன் பிரவேசித்திருந்தனர். அப்போது குமாரக்கடவுள் சூரன்முதலிய அசுரர்களின் வரலாறுகளை எல்லாம தமக்குச் சாங்கோபாங்கமாக எடுத்துரைக்க வேண்டுமென்று கட்டளையிடத் தேவராஜன்வசத்தில் வல்லபிரகஸ்பதிபகவானைவேண்டித் தேவரீர் நமது சண்முகப்பெருமானுக்கு அவைகளைச்சொல்லியருள வேண்டுமெனப் பிரார்த்திக்கொண்டபிரகாரம் அவர் சொல்வதாயினர்.

க வது உற்பத்திகாண்டம் முற்றிற்று.

———(o)———

உ

குகஸகாயம்

2-வது அசுரகாண்டம்.

விருத்தம்

ஊரிலான் குணங்குறியிலான் செயலிலானுரைக்கு
பேரிலானொரு முன்னிலான் பின்னிலான் பிறிதோர்
சாரிலான் வரல்போக்கிலான் மேலிலான் றனக்கு
நேரிலானுயிர்க் கடவுளா யென்னுளே நின்றான்

மரீசி குமாரனான காசிபருக்கு உதித்த அறுபத்தாறுகோடி இராட்சதருக்கு அரசனாகிய அசுரேசனென்பவன் சுமாலி புத்திரியாகிய மங்கலகேசியைக் கல்யாணஞ்செய்து பாக்கிய வசத்தினாற் சுரசை என்னும் பெண்ணைப்பெற்று அவள் ஒப்பற்ற வடிவைக்கண்டு பரிவாக வளர்த்து வரும்போது குரவனான சுக்கிரன் அவளுக்கு மாயவித்தைகள் அனைத்தையும் மந்திர பூர்வமாகப் போதித்து அவள் வல்லபத்திற்காக மாயை என்னும் நாமமிட்டு அரக்கர் சிறுமையினையும் தேவர் பெருமையினையும் எடுத்துக்கூறி இனி அசுரகுலம் விருத்தியடையும்படிக்கு நீ காசிப மகாரிஷியை மையல்பூட்டி அவரைச்சேர்ந்து வலிய பிள்ளைகளைப் பெற்று அவர்கள் பரமசிவத்தை நோக்கி அரியதவங்களைப் புரிந்து மேன்மையுறும்படி செய்வாயெனக் கட்டளையிட்டனர். அதை மாயையானவள் கேட்டு அடியேன் அப்படியே செய்யக்கடவனென அவரைச்சேவித்துப்போய்க் காசிபர் தவம் செய்திருக்கும் வனத்தையடைந்து மோகினிக்கும் மேலாகிய வடிவினைக்கொண்டு அவருடைய கண்ணிற் படத்தோன்றலும் அவர் சிவத்தின் கண் செலுத்திய சித்தம் கலைந்து அவள்பேரில் அடங்காத மையலைக்கொண்டு, பெண்ணரசியே! உமது வரவு என்பாக்கியவசமாகும். ஆதலால் உமதுகுலம் யாது? நீர் இருக்குமிடம் எது? உமது திருநாமம்என்ன? உமது தந்தை யாவன்? சற்று தயைசெய்து சொல்லுமெனக் கேட்டனர். மாயை அவரைப்பரிந்து நோக்கித் தவத்தினை விரும்பிய மகத்துக்களுக்கு இவைகளினால் ஆகவேண்டியதென்னை? முத்தியினை அளிக்கும் தவம் செய்யப்போம் என்றனள். காசிபர் மனம் கரைந்து காமநோய் வருத்துகின்றதால் சற்றுதயை செய்யவேண்டும் என்றனர். அதை மாயை கேட்டு நகைத்து நான் மேருவுக்குத்தட்சணபாகத்திலுள்ள கங்கையை நாடிச் செல்லுகின்றேன். ஆதலால், நான் அவ்வாறேபோய் வருவேனென்று சொல்லி மறைந்து விட்டனள். உடனே காசிபர் அவளிடத்திற் கொண்ட மையலினாலே மிகவும் துன்பப்பட்டு வருந்திப் பலவிதங்களாக வாய்விட்டுப் புலம்புவதாயினர். அப்போது சகல துன்பங்களுக்கும் மூலமான மாயையானவள் தான் எண்ணிவந்த கோரிக்கையினைப் பெறுதற்கு இது தருணமென்றெண்ணிப் பின் அவர்காண மின்னற்கொடியை ஒப்பத்தன் உருவம் வெளிப்பட நின்றாள். மாயையினைக்காசிபர் கண்டவுடன் திரவியத்தைக் கண்ட தரித்திரனைப்போலக் களித்துப்பின் அவருடைய சம்மதத்தின் பேரில் அவ்வினையனைத்தும்

கட்டிப்போகக்கடலின் கரைகாண மன்மத நூல் இலக்கணப்படிக்குக் கிரீடித்தனர். மாயையானவள் மனம்பூரித்துப் பேரானந்த சமுத்திரத்தைக் கடந்தவள் போலக்களித்தின்ப முற்றாள். அப்போது பிரமன் விண்டு தேவேந்திரன் விண்ணவர் முனிவராதியர் தத்தம் உள்ளம் நடுக்குறப் புயவன்மையிற் சிறந்த சூரபதுமன் பிறந்தான். அவர்கள் வியர்வையில் வலிபெற்ற முப்பதினாயிரம் வெள்ளம் தானவர் பிறந்தனர். பின் அவள் மற்றோரிடம் சென்று பெண் சிங்கவடிவாகக்காசிபர் ஆண்சிங்க வடிவுகொண்டு அவளைப்புணர உடனே ஆயிரமுகங்களையும் இரண்டாயிரம் கரங்களையும்பெற்ற சிங்கமுகாசுரன் உதித்தான். அவர்களின் வியர்வைகளிடத்திலிருந்து நாற்பதினாயிரம்வெள்ளம் சிங்கமுகங்களைப்பெற்ற இராக்கதர் பிறந்தனர். அவர்களை அவ்விடத்தேவிட்டு மற்றோரிடம் சென்று மாயையானவள் பெண்யானை வடிவெடுத்து நிற்கக்காசிபர் மதயானைவடிவுகொண்டு புல்லினர். உடனே நாலுகொம்புகளையுடைய யானைமுகத்துடன் தாருகாசுரன் உதித்தான். அவர்களின் வியர்வையில் நாற்பதினாயிரம் வெள்ளம் யானைமுகங்களைப்பெற்ற அவுணர் வெளிவந்தனர். மாயை பின் செம்மறியாடாக முனிவர் செச்சை வடிவுகொண்டு கூட உடனே அசமுகி என்னும் பெண்ணானவள் அவதரித்தனள். வியர்வையில் முப்பதினாயிரம் வெள்ளம் அவுணர் பிறந்தார்கள். அவர்களை அத்தலத்தில் நிறுத்தி வேறோரிடம் சென்று யாளி, புலி, குதிரை, மான், கரடி, முதலான மிருகங்களின் வடிவைக் கொண்டு விடியற் காலத்திற் புணர அவ்வம் முகங்களைப் பெற்று அறுபதினாயிரம் அவுணர் தோன்றினர். இவ்வாறே மாயையானவள் சூரன் முதலான நான்கு பிள்ளைகளையும் இரண்டு லட்சம் வெள்ளஞ் சேனைகளையும் ஓர் இரவிற் பெற்றனள்.

சூரியன்உதயமானபின் சூரன்தன்துணைவருடன்கலந்துவந்து தாய் தந்தையரை வணங்கிக் குரவரே! இனிநாங்கள் நடந்துகொள்ள வேண்டிய கிரமங்களைக்கட்டளையிடுவீரெனப்போற்றக்காசிபர் மகிழ்ந்து தவத்தினும் சிறந்த பொருளொன்றுமில்லை யெனப் பலநீதி வாக்கியங்களைப் போதித்துப் பின் மார்கண்டேயரின் சரித்திரத்தையும் வரன்முறையாக அவர்களுக்கு உதாரணமா யெடுத்துப் போதிப்பதாயினர்.

கடமென்னும் நகரத்திற் பிரமகுலத்தில் அவதரித்துத் தவம்

களைச் செய்து சிரேஷ்டரான குச்சகரென்பவருக்குக் கவுச்சிகரென்னும் ஓர் ஒப்பற்ற குமாரர் பிறந்தார். அவர் பரமசிவத்தைக்குறித்து அரிய தவங்களைச் செய்து ஈஸ்வரனநுக்கிரகத்தால் மிருகண்டேயரென்னும் பெயரும்பெற்றுத் தமது பிதாவை யுற்றகாலத்தில் அவர் புதல்வனை நோக்கி மிகமகிழ்வுற்று நீ கற்புடைய மனையாள் ஒருத்தியை மணந்து இல்லற தருமத்தை நடத்திப்பின் யோகசாதனைகளைச் செய்ய விருப்பமாகின்றேன் என்றார். அதற்கு அப்புதல்வர் தவத்தினல்லது பொய்யாகிய இல்லறத்தைப் பூண்டு ஜனன வாதையை ஒழிக்கலாகுமா? பிரமன் பூமியின் கண்ணிரானின்ற அளவற்ற மகாபாதகங்கள் அனைத்தையும் ஏகமாய்ச் சேர்த்துப் பெண் உருவாகப் படைத்ததேயன்றி வேறென்ன? இவை தேவரீருக்குத் தோற்றாதது மன்றே எனவுரைத்தனர். பிதாவானவர் இல்லற தருமவியலைப் பற்றிய பல நியாயங்களை எடுத்துக்கூறி நமது குலத்தினராகிய மேலோர் நரகத்தில் அழுந்துவதை நீத்தற் பொருட்டுத் தொன்மையைக்கடைப்பிடித்து இம்மை மறுமைப் பலனைத்தரும் புதல்வனைப் பெறவேண்டி உத்தமக்கன்னியை மணஞ்செய்யக்கடவாயெனக் கட்டளையிடப் புதல்வர் அக்கருத்திற்கிசைந்து அப்படிக்கானதோர் உத்தமஸ்திரீயை எனக்கு விவாகஞ் செய்துவைத்தால் நான் இல்லறத்திலிருக்க மனமுடையேனெனக்கூறப் பிதாவானவர் அவ்விதமே செய்வேனெனப் பெண் தேடிவரப் பிரயாணமாயினர். பயணமாகிப் பலவிடங்கள் துருவி வருங்காற் சோழதேசத்தில் அநுமயம் என்னும் ஓர்வனத்தில் அருந்தவராகிய உசத்தியரென்பவரின் குமாரி விருத்தை என்பவள் சகல இலக்கணங்களையும் பெற்றுப் பருவமுடையவளாயிருப்பதை யறிந்து அவர் அத்தவரின் ஆசிரமத்தை அணுகும்போது அவர் இவரை எதிர்வந்து உபசரித்துத் தமது இருக்கைக்கு அழைத்துவந்து அவருக்கு அமுதம் போன்ற போஜனத்தை அருத்தி மகிழ்ந்து, தேவரீர் இவ்விடம் எழுந்தருளியகாரியம் யாதெனவினவக்குச்சகர் தவசிரேஷ்டரே! நீர் அருமையிற் பெற்றபெண் கொடியை என் குமாரனுக்கு மணஞ்செய்யக் கருதிப் பேசவந்தோம் என்னும் வாசகம் செவிபுகாமுன் ஆனந்தவாரி பொங்க உடனே இசைந்தனர். இப்படி இருக்கும்போது விருத்தை என்பவள் தோழிப்பெண்களுடன் சேர்ந்து வனத்திற் பூக்கொய்து விளையாடச்சென்ற காலத்தில் ஒரு காட்டானை வேகமாய்த் தமது எதிரில் வரக்கண்டு தோழிப்பெண்கள் பலதிக்கிலும் ஓடிமறைய

அத்தருணத்தில் விருத்தையென்பவள் தானும் ஒருபுறம் ஓடிப்போய் ஆழ்ந்திருந்த ஒரு பாழ்ங்கிணற்றில் விழுந்து அழுந்தி மாண்டனள். தோழிப்பெண்கள் உசத்திய முனிவரைக் கண்டு வனத்திற்காட்டானை யைக்கண்டு பயந்து ஓடிவந்து விட்டோம். உம்முடைய குமாரத்தியா கிய விருத்தையைக் காணக்கூடவில்லை யெனச்சொல்ல அவர் மகா வருத்தத்தை யடைந்து எங்கனுந் தேடிக்காணுமற் பின் அக்காட்டின் பாழுங்கிணற்றில் அவள் மரித்துக்கிடப்பதைக்கண்டு எடுத்தகாலையில் யாவரும் வருத்தப்பட்டுப் புலம்புவதானார்கள். அப்போது, பெண் கேட்கவந்த குச்சகரானவர் அவர்களனைவருக்குந் தேறுதலைச்சொல்லி நாம் நாளை இப்பெண்ணை எழுப்பித்தருவோம். இக்கன்னிகை காலமு டிந்து இறந்தவளல்ல. இதனைப் போதவுணர்வினு லறிந்தோம் எனவு ரைத்து அவ்வுடலைத் தயிலக் கொப்பரையிற் பதனஞ்செய்து வைக்கக் கட்டளையிட்டனர்.

குச்சகமுனிவருடைய ஞானதிஷ்டியில் தோன்றியதென்னவெ ன்றால்:— தருமதத்தனென்னும் வணிகனொருவன் அவனுடையமா தாக்கள் சம்பாதித்துத்தருமம் நடத்திவந்த சொத்துக்களை அவர்களு க்குப்பின்தன் ஆளுகையில் ஓர்கபட இரசவாதியின் மாயையில் அக ப்பட்டுப் பொருளழிவுசெய்தமையால் அப்பாதகன் மதங்கொண்ட யானை யாகப்பிறந்து பூர்வசம்பவங்களொன்றையும் அறியாது இதனை ச்செய்தானென்பதாம். குச்சகர் இப்பிறப்பைச் சிவகடாக்ஷத்தினல் இந்நிமிஷத்தில் மாற்றுவேனெனத்துணிவு கொண்டவராய்த் தமது தவத்தின் ஒருதினப்பலனை அந்தயானைக்குத்தத்தம் செய்தகாலத்தில் அப்பாதகம் நசித்து அவ்வுருமாறிச் சுந்தரமுள்ள தேவவுருவம் பெற் றுநின்றனன். பின் அவன் அவருடைய அருளினாற்பொன் னுலகப்பதவி யை அடைந்தான். பின்பு குச்சகமுனிவர் எமதர்மராஜனைத் தியா னிக்கஅவன்வந்து இறந்தபெண்ணுக்கு உயிர்ப்பிச்சைதந்து சென்ற னன். உடனேசகலரும் ஸந்தோஷசாகரத்தில் மூழ்கிக்குச்சகருடைய குமாரனுக்கு விருத்தையைத் திருக்கல்யாணஞ்செய்து கொடுத்தா ர்கள். இவர்கள் உயிரும் உடலும் போலக்கூடிவாழும் நாளில் மிரு கண்டுஎன்னும் ஓர் புத்திரனைப்பெற்றார்கள். இவருக்குத்தகுந்த பிரா யம்வந்தபின் மருத்துவதியென்பவளை மணந்து வெகுகாலம் பிள்ளை

யில்லாமலிருந்தபடியால் பரமசிவத்தைக்குறித்து அவர்கள் தவம் செய்யமுதல்வன் பிரசன்னமாகி அவரை நோக்கித் துர்க்குணமுள்ள பிள்ளைவயது நூறு உடையதாகத் தேவையா? அல்லது சற்குணமுள்ளபுத்திரன் பதினாறுவயதுடையவன் தேவையாவெனக்கேட்க மிருகண்டுவென்பவர் பதினாறுவயதைப்பெற்ற சற்புத்திரனையே வேண்டிக்கொள்ளச் சிவபிரான் அவ்வாறே அநுக்கிரகித்தனர். பின் மருத்துவதியென்பவள் கருப்பமுற்றுத் திரிலோகங்களுமீடேற வேதங்களையோதும் வாயைப்பெற்ற ஓர்திருக்குமாரனைப் பிரசவித்தனள். பிரமதேவர் எழுந்தருளி அப்பிள்ளைக்குமார்க்கண்டனெனப்பேர்தந்து சென்றனர். கலைகளனைத்தினும் தேர்ந்து பதினாறுபிராயம் பெற்றுவிளங்குந் தமது திருக்குமாரனாகிய மார்க்கண்டனென்பவனைப் பெற்றோர்பார்த்து விசனிக்க நேரிட்டகாலையில் அவன் அவர்களுக்குத் தயிரியங்கூறிப்பரமசிவனைக்குறித்துத் தவஞ்செய்து நான்பூரணஆயுளைப்பெற்று வருவேனெனத் தாய் தந்தையரிடம் விடைபெற்று அதிசீக்கிரத்தில் திருமணி கன்னிகையென்னும் ஆலயத்துட்சென்று ஸ்ரீ விஸ்வநாதரைச் சேவித்துமகிழ்ந்துபின் அவ்வாலயத்தின் தென்பாரிசத்தில் பரமசிவன் உருவமாகிய இலிங்கத்தைஸ்தாபித்து அன்புடன்பூசித்துவருகையில் பரமசிவன் எழுந்தருளி அவனைக்கிருபா நோக்கமாகப்பார்த்துப் பிள்ளாய்! காலனுக்குச்சிறிதும் அஞ்சலை! அஞ்சலை! என்று தமது உபயசரணாரவிந்தங்களையும் பத்தன் சிரத்திற்சூடினர். பின்னும் மார்க்கண்டன் பழயபடியேசிவலிங்கத்தைப் பூசனைவழிபாடுகள் செய்துவரும்போதுபதினாறுவயதும் பூரணமாயிற்று. அப்போதுஎமபடன் அவனுடைய உயிரைக்கொண்டுபோகவந்தனன்பாலன் பரமசிவன் பாதகமலங்களைஎக்காலமும்தொழும்இயல்பினனாயிருப்பதால்அவன் பயந்துதிரும்பிப்போய்இயமதருமனிடம்சொல்ல அவன்பெருமையைவாய்ந்தகாலனை அனுப்பினன். அவன்மார்க்கண்டனை அணுகியழைத்தகாலையில்அவனைமார்க்கண்டன்இங்கு அணுகாது போவெனக்கோபித்துரைக்கஅவன் மீண்டு தருமராஜனிடம் சென்று அதனைத்தெரிவித்தான். இயமராஜன் மகாகோபங்கொண்டெருமைக்கடாவாகனத்திலேறிக்கரியதேகத்தையும் கொடியவேலையும் தாங்கிப் பாலன் சமீபத்திற்போய்த்தான் கரத்திற்கொண்ட காலபாசத்தைக் கிறுகிறெனச் சுழற்றியெறிந்து அவனுடைய திருக்கண்டத்தில் மாட்டிச் சிவலிங்கத்துடன் வலித்திழுக்கத் தொடங்கினன். அதுசமயத்தில் மார்க்கண்டன் சம்ப

காக்கவல்ல ஆக்கினைச்சக்கிரமும் நினைத்தற்குமுன் அவைகளைச் சுற்றிப்
பார்த்து வரும் வேகமுள்ள வாகனங்களும் எக்காலமும் அழிவில்லாத
வச்சிரதேகமும் தந்தருளவேண்டும். இஃதன்றியும், கேசவன் முதலி
யோர் எதிர்த்தாலும் அவர்களையும் ஜெயங்கொள்ளும் வலிமையும்
சமஸ்த தேவாஸ்திரங்களுக்கும் நாசமில்லாமல் சிரஞ்சீவியாயிருக்
கையும் கடாக்ஷிக்க வேண்டுமென்று பிரார்த்திக்கப் பரமேஸ்வரன்
அருளிச்செய்வார்: இப்பூமண்டல வெல்லையுள் ஆயிரக்கோடி அண்டங்
கள் உண்டு. அவற்றுள் ஆயிரத்தெட்டு அண்டங்களுக்கு நீ அதிபனாய்
நூற்றெட்டு யுகங்கள்வரையில் அரசுசெலுத்தக்கடவாய் என்று அண்
டங்கள் முற்றிலும் நினைவின்படிக்குச் செல்லும் வேகமும் வலியும்
பெற்ற இந்திரஞாலமென்னும் தேர் ஒன்றையும் அப்புவனங்களைப்
பாதுகாக்க விஷ்ணுவின் சக்கிரத்தினும் சிறந்த திகிரி ஒன்றையும்
வீரம்பெற்ற சிங்கவாகனம் ஒன்றையும் பாசுபதாஸ்திரம் முதலிய
தேவப்படைகளையும் எக்காலத்திலும் அழிவில்லாத வச்சிரகாயத்தை
யும் அனுக்கிரஹித்து மிக்கவலி பெற்ற பதினாயிரக்கோடி சயினியங்
களையும்படைத்தளித்துச் சூரபதுமனையாரினும் பெரியோனாகச் செய்த
காலையில்துணைவராகிய சிங்கமுகனும் தாருகனும் கர்த்தன் திருவடிக
ளிற் சேவித்துப் போற்ற அவர்களுக்கும் வேண்டிய வரங்கள் அஸ்தி
ரங்கள் கொடுத்துப்பின் ஆதி மூர்த்தியானவர் மூவரையும் நோக்கி
நமது ஒப்பற்ற சத்தியொன்றினாலன்றி மற்றெவர்களாலும் உங்களை வெ
ல்லபடாதென்ற ருளிப் பூதகணங்கள் போற்றத்தமது திருக்கயிலைக்
கெழுந்தருளினர்.

மாயையானவள் தனதுபுத்திரர் பெற்றவரங்களுக்காக ஆனந்த
சாகரத்தில் மூழ்கியிருந்தனள். பின்மூவரும் தமது பிதாவாகிய காசிப
ரையடைந்து நமஸ்கரித்துச் சிவகடாக்ஷத்தினால் தாங்கள் பெற்றவைக
ளைத் தெரிவித்து அவருடைய ஆசீர்வாதமும் பெற்றனர். அசுரகுரு
வாகிய சுக்கிரபகவான் அவர்களை வந்தடைந்து அவர்கள்பெற்ற பேற்
றினுக்காக மிகச்சந்தோஷங்கொண்டு அம்மூவருக்கும் மகாவிஷ்ணு
முதலியதேவர்கள் அனைவரையும் ஜெயங்கொண்டு திக்கு விஜயமும்
பெற்றுத் திரும்பி இப்பூமியிற் சிறந்தவிடத்தில் ஓர் நகரம் உண்டாக்கி
அதிற் சகலருந்தொழுது சூழ அரசுசெலுத்திவாழக்கட வீர்களெனக்
கட்டளையிட: அவர்கள் அதற்கு இசைந்து அவ்வாறேவலிபெற்ற சயினி

யங்களுடன் பயணமாகிக் குபேரன் பட்டணமாகிய அழகாபுரியை வந்து வளைந்துகொண்டு அவன் பரமசிவத்தின் பூரணகடாக்ஷம்பெற் றவர்களென்ன வெண்ணி அவர்களை எதிர் கொண்டுவந்து ஆசீர்வதித்து என்னையும் எனது சுற்றத்தையும் உங்களது அடிமைகளாகக் கொண் டருள வேண்டுமென வேண்டியபின் தனது இருக்கை சேர்ந்தான். இவ்வாறே மூவரும் இந்திரன் அக்கினி இயமன் நிருதி வருணன் முதலானவர்களைத் தமக்குச் சரணமடையும்படி செய்தார்கள் தீவாந் தரங்கள் சத்தபாதலங்கள் இவைகளிலெல்லாஞ் சென்று வேற்றி கொண்டு தமதுகொடியை நாட்டியபின் மகாவிஷ்ணுவையும் சண்டை க்கழைத்து அவருடைய சக்கரத்தையும் தாருகாசுரன் தனக்குக் கழுத் தணியாகக்கொண்டனன். பின் மூவரும் தேவாதிதேவனாகிய பரமன் வீற்றிருக்கும் திருக்கயிலையைச் சேர்ந்து தமது வாகனங்களை விட்டிற ங்கிப் பரமனைப் போற்றிப்பணிந்து மற்ற அண்டங்கள் முற்றிலும் போய்ப்பார்த்து வருவதாய்ச் சென்று அவ்வாறே அவ்விடங்களிலெ ல்லாம் ஜெயசீலராய்த் திரும்பிச் சுவர்க்கலோகம் வந்து சேர்ந்தனர். அப்போது பூர்வத்தில் தேவர்களுக்குத தோற்றோடிமறைந் திருந்த தானவ அரசனாகிய அசுரேந்திரனென்போன் தனது குருவாகிய சுக் கிரபகவானிடம்திக்குவிஜயம் செய்துவரும் சூரபதுமனைக் காணவிரு ம்புகின்றேன். தேவரீர் அதற்குக் கிருபைசெய்ய வேண்டுமெனப் பிரார்த்திக்க அப்பகவான் அப்படியே சூரனுடன் இவன்பந்துத்து வம்பாராட்டியிருக்கும்படி செய்து வைத்தார்.

பின் சூரனானவன் தனது துணைவர்களுடன் பூமண்டலம் வந்து சேர்ந்து சுக்கிரன் கட்டளைப்படிக் ந விஸ்வகர் மனைக்கொண்டு தென் சமுத்திர நடுவில் தனக்கு வீரமாமயேந்திர மென்னும்பெயருள்ளஓர் ஒப்பற்ற நகரத்தையும், சிங்கமுகன் வாசஞ்செய்வதற்கு ஆசுரமென் னும் ஓர் நகரத்தையும் உண்டாக்கிப் பின்தனது மற்றோர் சகோதரனா கிய தாருகனுக்கு மகம் மேருவுக்குத் தென் பாரிசத்தில் மாயாபுர மென்னும் பெயருள்ள ஒரு பட்டண முண்டாக்கிப் பின் தனக்குநிரு மித்த பட்டணத்திற் சகலவைபவத் துடனும் பிரமனாதியர் சகலரும் போற்றச் சுபதினத்திற் பிரவேசித்துச் சபாமண்டபத்திற் கோடிசூரி யப்பிரகாசம் பெற்று விளங்கும்சிங்காசனத்தில் வீற்றிருந்தான். அத் தருணத்தில் நான்முகன் வயிர முடியினை இராஜாதிராஜன் சிரசிற்சூடி

னன். இந்திரன் முதலிய தேவர்களும் அவனுக்காக வேண்டிய பலவேலைகளைச் செய்து கொண்டு கைகட்டி அவன் தயவுக்கு எதிர்பார்த்து நின்றனர். அப்போது சூரன் மகாவிஷ்ணுவைப் பார்த்து நீ இன்றுமுதல் நாம் வேண்டும்போது வந்து செய்திகளைக் கேட்டுப் போக்கடவையென்றும், பிரமனை நித்தியம் பஞ்சாங்கம் சொல்லிப் போவாயெனவும், இப்படி மற்றத் தேவர்களுக்கெல்லாம் பலகட்டளைகளை ஏற்படுத்தியபோது அவர்கள் தேவரீர் கட்டளைப்படியே நடக்கின்றோமென வணங்கி நின்றனர். பின் விஸ்வகர்மன் புத்திரியாகிய பதுமகோமளை என்பவளைச் சூரனும், அக்கினி தேவன் புத்திரியாகிய விபுதை என்பவளைச் சிங்கமுகனும், கிருதிபுத்திரியாகிய சவுரி என்பவளைத் தாருகனும்மணஞ்செய்து கொண்டார்கள். இவ்விதமாகத் திருக்கல்யாணங்கள் முடிந்த பின்சூரனானவன் தம்பியரை நோக்கி உங்களுக்கு ஏற்படுத்தியிருக்கும நகரங்களிற் சேர்ந்து நம்மைப் போலவே சகல செல்வங்களையும் அனுபவித்திருப்பீர்களென்று சொல்லிச் செலவு கொடுத்தனுப்பினான்.

இப்படிச்சூரன் சக்கிரேஸ்வரனாய் ஆண்டுவரும் காலத்தில் ஓர் தினம் அவன் இந்திரன் முதலியோரை அழைப்பித்துச் சமுத்திரமகர மச்சங்களைப் பிடித்துநாம்புசிப்பதற்குத் தினம் கொண்டு வந்து சேர்க்கக்கட வீர்களெனக் கட்டளையிட அவர்கள் அவ்வாறே நாள் தோறும் அவ்விழி தொழிலைக் குறைவறச் செய்து துக்கசாகரத்தில் அழுந்தி வேத வொழுக்கங்களை இழந்துசிங்கமுகன் தாருகனுக்குரியபணி விடைகளையும் செய்து வருவார்கள்.

இப்படி நடந்து வருங்காலையிற் சூரபதுமனுடைய பட்டத்துத் தேவியாகிய பதுமகோமளை என்பவள் எமனைப்போன்ற குமாரனொருவனைப் பெற்றாள். அக்குழந்தை விருத்திச் சந்திரனைப் போல்வளர்ந்து வருங்காலையில் ஓர்தினம் பொற்றொட்டிலில் நித்திரை செய்யும்போது சன்னல் மார்க்க மாகச்சூரிய கிரணமானது தன்மீது கொஞ்சந்தாக்க அவன் கோபங்கொண்டு உடனே வேகமாய்ப் பாய்ந்து சூரியனைக்கணத்திற்பிடித்து மீண்டு தனது தொட்டிற்காலிற் கட்டி நித்திரை செய்தான். பின்பிரமதேவன் தனது பிரமாஸ்திரத்தையும் மோகனாஸ்திரத்தையும் அப்பாலனுக்கு வெகுமானமாக்க் கொடுத்து வேண்டிச் சூரியனை விடுவித்தனன். பிதாவாகிய சூரன் இவைகளைக் கே

ஏவப்பட்டு மிகமகிழ்ச்சி யடைந்து தனது குமாரனுக்கு அக்காரணத்தினும் பானுகோபனென்று பேரிட்டான். இவன் காளைப்பருவமடைந்தபோது மகா விஷ்ணுவையும் போரிற் செயித்து அவராற்புகழ்ப்பெற்று வாழ்ந்தான்.

சூரபதுமன் தங்கையாகிய அசமுகி என்பவள் அழகுள்ள புருஷரைத் தேடி இரவுபகல் என்னும் பேதமில்லாமல் சேர்ந்த போது அவர்களை வலியில் தழுவி இன்ப நலத்தினை அனுபவித்துக் களித்தும் சிறந்தவடிவுள்ள தேவபத்தினியரைப் பலவந்தமாகக் கொண்டுவந்துதன் தமயன் மார்புறத் தழுவி மணங்களிக்கக் கொடுத்தும் இவ்வண்ணமாகத் திரிபவள் ஓர் தினம் துர்வாச முனிவரை அடுத்து அவரைவலியிற் புணர்ந்து வில்வலன் வாதாவி என்னும் இரண்டு கொடிய புத்திரரைப் பெற்றனள். அக்குமாரர் தமது பிதா வாகிய துருவாசரிஷியினுடைய பாதங்களிற் பணிந்து தேவரீர் கோற்ற தவமுயற்சிகளை எங்களிருவருக்கும் தரக்கடவீரெனக்கேட்க, அதற்கு அவர் குமாரர்களே! நீங்கள் அதைத்தவிர வேறே எதனைக்கேட்கினும் தருவேனென்ற வளவில் அவர்கள் பிதாவின் பேரிற்கோபங்கொண்டு கொல்ல எத்தனித்த போது முனிவர் வெகுண்டு நீங்கள் இருவரும் அகத்திய முனிவரால் மாளக்கடவீர்களெனச் சபித்து ஓர் மாயமந்திரத்தை உச்சரித்து அப்பாதகர் விழிக்குட்புலப்படாது மறைந்தனர். பின் பாதகர் இருவரும் பிரமனைக்குறித்துக் கடுந்தவம் புரிந்து தீங்கு செய்யும்படிக்கு ஏதுவானவரங்களையே பெற்றுக் கொண்டார்கள். வில்வலன் என்பவன் தனது சகோதரனாகிய வாதாவியை மாயமாகிய ஓர் ஆட்டுக்கடா வாக்கித்தான் முனிவனைப்போல மாயவேஷந்தாங்கித் தனக்கு எதிர்ப்பட்ட ரிஷிகளைப்போற்றித் தன்னாசிரமத்துக் கழைத்துப்போய் அமுதுண்ண வேண்டுமென்று தனது துணைவனாகிய ஆட்டைக் கொன்றுசமைத்து அவருக்கு உண்ணும்படி படைத்து அவர் உண்டபின்புவாதாவி வாவென்றழைப்பான். அவ்வொலியினைக் கேட்டமாத்திரத்திற் பிரமன் வரமுயற்சியினால் அவன் உருவம்பெற்றுக் கூரியகொம்பினால் அம்முனிவரின் வயிற்றைப்பீறி வெளிவர அதினால் இறந்த வுடலை இருவரும் புசித்துத் தினமிருப்பர்.

சூரபதுமன் ஓர்சமயத்தில் இந்திரன் மனைவியாகிய இந்திராணியைபபிடித்து வருவீரெனக்கட்டளையிட்ட சமாசாரம் இந்திரன் தெரிந்து விரைவில் தன் அந்தப்புரம் சென்று தன்தேவிக்கு அதைத் தெரிவித்து அவளும் தானும் குயிலுருப்பெற்று மாயமாகத்தன் நகரைக்கடந்து இப்பூமியிற் சீகாழித்தலத்தை யடைந்து பரமசிவனை அருச்சித்துப் போற்றியிருந்தார்கள். அவர்களிருவரும் அவ்வாலயத்தைச் சுற்றிலும் நந்தவனம் உண்டாக்கி அதிற் புஷ்பிக்கும் மலராற் பரமனை அருச்சித்திருக்கும் போது மழையின்றிப் பூஞ்செடிகள் மிக வாடிப்போயின. அதற்காக இந்திரன் வருத்த முறத், தேவராஜனே இக்காவின் மத்தியில் ஒரு நதி பெருக விருக்கின்றது. அதனால் இவ்வனம் மிகவுஞ்செழித்து உன் பூசனைக்குத் தாழ்வில்லாமற் புஷ்பங்களைத்தருமென்று ஒரு வாக்கியம் வானத்தில் உண்டாகியதை அவன் கேட்டு மகிழ்ந்து பழயபடிக்குத் தவஞ்செய்து கொண்டிருந்தான்.

அக்காலையில் நாதமுனிவரானவர் விந்தகிரியினருகில் வந்து ஓ! வரைகளிற் சிறந்த விந்தமே! மகம்மேருவானது தனக்கு ஒருவரும் நிகரில்லை யென்று தன்னையே முக்கியமாக வெண்ணி இறுமாந்திருக்கும் காரணத்தை அதற்குமேம்படச் சிறப்பையுடைய நீமதித்துப் பார்த்ததில்லையோ? துரிதமாய் அம்மலையினது கருவத்தை யடக்க முயர்ச்சிப்பாயெனச்சொல்லிச் சென்றனர். உடனே விந்தகிரியானது அண்டகோளகையை அளாவிச் சத்தியலோகம்வரையிலும் உயர்ந்து மகம்மேருவை நெருங்கப்பரந்து நின்றது. இதனால் வெளியிடமில்லாமல் வானவழி யடைபட்டிருந்தமையால் தேவர்கள் இனிஎன்ன செய்வதெனக்கருதிப் பொன்மலைச் சாரலில் தவஞ்செய்திருக்கும் அகஸ்திய முனிவரை வேண்டிக் கொண்டனர். அப்போது கடலையுண்ட குறுமுனிவர் பரமசிவனைத் தியானித்துப் போற்றி நிற்கும்போது பரமன் பூதகணங்கள் சூழக்காட்சி தந்து தவசிரேஷ்டரே! உமக்குவேண்டுவ தென்னை எனத்திருவாய்மலர்ந்தவுடன், சுவாமி! விந்தகிரியை அடக்கும் படிக்கான சக்தியை அடியேனுக்கு அநுக்கிரகம் செய்யவேண்டுமெனப் பிரார்த்திக்க, அவர் வேண்டுவதற்கிரங்கிப் பசுபதி அவ்வாறே தந்தனம். விந்தம் பாதலம் சேர்ந்த பின்பு நீபொதிய மலையைச்சேர்ந்து தவஞ்செய்திருப்பாயெனக் கட்டளையிட, அகஸ்தியர் கர்த்தனே! தேவ

நீரை அவ்விடத்திற் பூசிக்க நீர்வளம் வேண்டும். ஆதலால் அத்தலத்திற் சிவநதி பெருகக்கடாக்ஷிக்க வேண்டுமெனப் பிரார்த்தித்தனர். பரமன் காவிரியை நோக்க அவள் சங்கரனது பாதங்களில் வந்து பணிந்து நின்றனள், பெருமான் ஓ! பெண்கொடியே இந்தவசிஷ்ரேஷ்டர் பின் நீ செல்லக்கடவாய். இவர் உன்விஷயத்திற் கையைக்காட்டுங் காரணம் சம்பவிக்குமானால் அன்றையதினம் நீபிரிந்து பூமியின்கண் பெருகிச் சகலரும் மூழ்கிப்போற்றிக் கதியைப்பெறும்படி நிலைபெற்றிருப்பாயெனக் கட்டளையிட்டுச் சிவபிரான் குறுமுனிக்குத் தக்ஷண தேசத்திற்குப் போகச்செலவு கொடுத்துத் தமது கயிலாயஞ் சேர்ந்தனர். அகஸ்தியர் தென்திசையை நோக்கி நடந்து வரும்போது பருவதவடிவு கொண்டிருக்கும் கிரவுஞ்சனென்னும் இராக்கதப்பாதகன் அதனைத்தெரிந்து அவரைவஞ்சிக்க எண்ணங் கொண்டு மாயமந்திரங்களை உச்சரித்துப் பலமாயா விநோதங்களைக் காட்டலாயினன். அதை அகஸ்தியர் தெரிந்து கோபங்கொண்டு பாதகனது உருவமாகிய மலையினிடத்தில் தமது கையிலுள்ள தண்டினாற் குத்திப்பலவிரிந்த துவாரங்களாக்கிப் பின் ஓ! சண்டாளனே! நீ சரவணபவன் வெற்றிவேலினாலிறக்கக்கடவை யெனச்சாபமிட்டுப் பின் தெளதேசத்தைக் குறித்து நடப்பதாயினர்.

அப்படி வருங்காலையில் தேவகிரியின் மார்க்கமாய்க் காசித்தலத்தைத் தெரிசித்துக்கொண்டு விந்தகிரியின் சமீபத்தில் வந்து நாம் பொதிகைக்குப் போகும்படிக்குச் சிறிது வழி விடவேண்டுமெனக் கேட்க விந்தமானது ஓ! குறியவனே! உனக்கு அஞ்சிவழிவிடுவேனோ? வந்தவழியைத் திரும்பிப்பார்த்து ஓடிப்போவென்று இறுமாந்துரைக்க அகஸ்தியர் மகாகோபங்கொண்டு அக்கிரியினது உச்சியில் தமது உள்ளங்கையைவைத்து அழுத்திப் பாதலத்திற் சேரும்படி செய்தனர். அப்போது விந்தமானது நடுக்குற்று ஓ! தபோநிதியே! நாயினேன் அபராதத்தைப் பொருத்தருள வேண்டுமென வேண்டத்தமிழ்முனிவர் குறுநகைகொண்டு விந்தமே! நாம் பொதிகையிலிருந்து இம்மார்க்கமாய்த் திரும்பிவரும்போது நீ முன்போல நிற்பாயெனச்சொல்லித் தேவர்கள் கொண்டாட வில்வலன் வாதாவி என்பவர் வசித்திருக்கும்படியான விடத்தில் வந்துசேர்ந்தனர். வில்வலன் அம்முனிவரை எதிர்சென்றழைத்துப்போய்த்தனது ஆச்சிரமத்தி லிருத்தி

ஆட்டின் உருப்பெற்றிருக்கும் தனது சகோதரனாகிய வாதாவியைக் கொன்று உண்டியுடன் சமைத்துக் குறுமுனிக்குப் படைத்து அவர் போஜனம் செய்து முடித்த பின் சண்டாளனாகிய வில்வலன் தனக்கு முன்னம் பிரமதேவன் அநுக்கிரகம் செய்த மந்திரத்தை உச்சரித்துத் தம்பீ! வாதாவீ! வாவென அழைத்தான் அதுசமயம் அண்ணா! இதோ வந்துவிட்டேனென முனிவரின் வயிற்றைப் பீறிவெளியே உருப்பெற்று வரும்படி ஆர்ப்பாட்டஞ் செய்யக் குறுமுனியிது அசுரரின் மாயையெனத்தெரிந்து பரமசிவனைத் தியானித்துத் திருநீற்றைக்கரத்தில் அள்ளி வாதாவி அவ்வாறே ஜீரணிக்கக்கடவதென மும்முறை தமது வயிற்றைத் தடவியவுடன் அப்பாதகன் ஜீரணித்துப் போயினன். வில்வலன் அதைத்தெரிந்து கோபித்துத் தண்டமொன்றைக் கைப்பற்றி அவர் சிரத்தில் மோதிக்கொல்லவர, உடனே முனிபுங்கவர் தருப்பை ஒன்றை எடுத்துப் பாசுபத மந்திரத்தை உச்சரித்து விட அவனும் சாம்பலாய் விழுந்தான்.

அகஸ்தியர் இவ்விதமாய் அசுகமுகியின் பிள்ளைகளை மாய்த்த பின்பு காவிரிப்புனல் அடங்கிய கமண்டலத்தைத் தாங்கித் தண்டத்தை ஊன்றிக் கொங்கு தேசத்தைச் சேர்ந்து பரமசிவனை அருச்சித்துப் பிரமஹத்தியைப் போக்கிக்கொண்டு தேவேந்திரன் தவஞ்செய்திருக்கும் சீகாழித்தலத்தை வந்துற்றனர். அப்போது நாரதர் அதிக வேகமாய் வந்து இந்திரனைக்கண்டு உனது பூசனைக்குத் தவறு நேரிடாதபடிக்கான காலம் நெருங்கியது. கேட்பாயாக! நீவிரைவில்விநாயக மூர்த்தியைப் பூசித்து அவரை அகஸ்தியர் கமண்டலச்சலத்தைக் கொட்டிவிடும்படி செய்வாயெனச் சொல்லிப் போந்தனர் தேவேந்திரன் அவ்வாறே விநாயகக்கடவுளைப் பிரார்த்திக்க, அவர் அப்படியே முடித்துத் தருவமென்றருளி வேகமாய் அகஸ்தியர் ஆசிரமத்திற்குக்காக்கை உருவமாகி வந்து காவிரிதீர்த்தமிருக்கும் கமண்டலத்தின் பேரில் உட்கார்ந்திருந்தனர் கும்ப முனிக்குக் கணபதி என்பது தோற்றாமல் தமது கையை நீட்டிப் போவெனத் துறத்தினர். அப்போது கஜாநநர்குண்டிகையைத்தள்ளித்தேவராஜன் கோரிக்கைப் படிக்குப் பூமியிற் பெருகக்கடவாயென்று அநுக்கிரகஞ் செய்தனர். காவிரி வெள்ளமானது ஆர்ப்பரித்து உலகத்திற்சென்றது. விநாயகர் காக்கைவடிவு நீங்கிப் பிராமணப்பிள்ளையைப்போலப் போவதை அகஸ்தியர் கண்

யெழுது அரக்கனின் மாயையென மகாகோபங் கொண்டு இவன் அகங்காரத்தை அடக்குகிறேனென அவர் தலையில் தமதுகையினாற் குட்டவிரைந்தெழுந்து தொடர்ந்தனர். அப்போது விநாயகர் அவருக்கு அகப்படாமல் எங்கும் உலவித்தப்பித்துக் கொண்டதினால் முனிவர் இளைத்து வலியடங்கிச் சோர, உடனே விநாயகர் அவரிற் கிருபையுற்றுத் தமது சொரூபத்தைக் காட்டினர். அக்கோலத்தை முனிவர் கண்டு திடுக்கிட்டு இந்த அபராதத்திற்கு என்னசெய்வோமெனத் தமது சிரத்தில் தாமே வருந்தும்படி மாறி மாறிக்குட்டிக் கொண்டு சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து தம்மை மன்னிக்கும்படி பிரார்த்தித்தனர். விநாயகர் நீரெமக்குச் செய்தவைகளை நாம் சற்றுங் குற்றமாக நினைக்கவில்லையென முனிபுங்கவரைத் தேற்றிப்பின் தமது துதிக்கையினை நீட்டிக்காவிரிப் பெருக்கின் ஜலத்தினைக்கிரகித்து அகஸ்தியருடைய கமண்டலத்தில் விட்டனர். மற்றப்பிரவாக மெல்லாம் பூமியிற்பெருகிப் போயின உனக்கும் வேண்டும் வரம்யாது என விநாயகக்கடவுள் திருவாய்மலர முனிவர் பன்முறை அவரை வணங்கி இனிமேல் தேவரீரை வழிபட்டு யாவரேனும் குட்டிக்கொள்வாராயின் அவர்களுக்கு வேண்டும் வரங்களைக் கடாக்ஷிக்கவேண்டு மெனப் பிரார்த்தித்துக் கொண்டவண்ணம் விக்கினகர்த்தன் வரந்தந்து தமதிருப்பிடஞ்சென்றனர். பின் அகஸ்தியமுனிவர் கொங்குதேசத்தைக் கடந்து தென்றிசையை நோக்கிப் பரமேஸ்வரன் புகழினைத் துதித்துக்கொண்டு அகங்காரத்தினாற் சிவத்துவேஷத்தை யுடைய வைணவப்பிராமணர்குடியிருக்குங் குற்றாலத்தைச்சேர்ந்தபோது அவ்வினத்தார்வெகுண்டு சிவனுக்கடிமையாகிய நீ பவித்திரமாகிய இத்தலத்தின் எல்லையையும் மிதிக்கக்கூடுமோ? சீக்கிரமாய் இவ்விடத்தைவிட்டு போவெனக் கடுஞ்சொற்கள் கூறித் துரத்துகின்றவர் மீது அகஸ்தியர் கோபியாமல் இதோ போய்வருகிறேனென்று ஓர்பால் ஒதுங்கிப்பின் அவர் விஷ்ணுவுக்கு ஸ்ரீதாசனைப்போலக் கோலங்கொண்டு திரும்பிவரக்கண்டவர்கள் இவர் நமது நாராயணனுக்குப்பிரியபக்தராகிய மகத்துவென அவர்பாதங்களிற்பணிந்து விஷ்ணு எழுந்தருளியிருக்கும் ஆலயத்திற்கு அவரை அழைத்துப்போனார்கள். அப்பொழுது அவர் வயிணவரிடத்தில் தாம்பெருமாளைப் பூசிக்க வேண்டுமென்பதாய் அதற்கு வேண்டியவைகளையெல்லாம்சேகரித்துக்கொண்டு மூர்த்தியின் சமீபத்திற் போய்த் தமது குறியகரங்களை அக்கடவுளின் திருமுடியின் மீது வைத்துக் "குறுகு

குறுகுகுற்றுளா” என்று அமுக்கிக் குழையச் செய்து திரட்டியுருட்டிச் சிவலிங்க வடிவமாக்கிப் பின் தாமும் சிவவேடந்தாங்கிச் சிவாகமங்களையோதி அர்ச்சிக்கும்போது இச்செயல்களைக்கண்ட வைணவப் பிராமணர் தேகம் புழுங்கக் கோபித்து வஞ்சகன் தப்பிப்போகுமுன்னம் அவனைப்பிடியுங்கள் கட்டுங்கள் அடியுங்களென்று பலவகைகளைப் பேசிக்கொண்டு சூழ்ந்து தம்மைப் பிடிக்கவருவதை அகஸ்தியர் கண்டு கோபித்து அவர்களைப் பார்த்தமாத்திரத்தில் சீற்றக்கனல் அதிகரித்து அவர்களின் தேகங்களைச் சுட்டுக்கரித்துவாட்ட அவர்கள் அதைச் சகியாதவர்களாய்க் கைகால்கள் ஒடியப் பலதிக்கிலும் ஓடியொழிந்தனர் அத்தினமுதல் அது விஷ்ணுஸ்தலமென்பதுமாறிச் சிவஸ்தலமாயிற்று. பின் குறுமுனிவர் பொதியமலையைச்சேர்ந்து ஓர்சாரலில் அமர்ந்து பரபசிவனைக் குறித்துத் தவஞ்செய்திருந்தனர்.

இப்பால், அகஸ்தியர் கமண்டலத்தினின்றும் கவிழ்ந்த காவிரியானது மகாமகிமையுடன் ஆகாயத்தை அளாவஅலைகளை வீசிக்கொண்டு பலகாத எல்லை அளவாகப்பரந்து கிழக்குத்திசையை நோக்கித் தேவேந்திரன் வாசமாய்ச் சிவபிரானை வழிப்பட்டிருக்கும் வனத்திற் பரிமளபுஷ்பங்களையுடைய பூஞ்சோலையிற்பாய்ந்து வாடிநின்ற நந்தனவனம் குளிர்ந்து பசுமையாகத்தோற்றுவதை மகவான்கண்டு பூரித்து ஆனந்தக்கூத்தாடிப் பரமசிவத்தையும் விநாயகமூர்த்தியையும் கொண்டாடிக் கொண்டிருந்தான். இவ்விதமாகத் தேவர்கோன் அம்பிகாபதியை வழிபட்டுவரும்போது சூரபதுமனிட்ட கொடியபணிவிடைகளைச்செய்து தேகமும் மனமும் மிகவும் வருந்தியதேவர்களிற் சிலர் ஐய கோ! எக்காலம் எங்கள்துன்பங்கள் நீங்கப்போகின்றதெனஇந்திரனைவந்துகண்டு முறையிட்டுக்கொள்ள அவன்மிகவும்வாடி என்னசெய்வதெனயோசித்துக் கயிலைக்குச்சென்று புவனேஸ்வரருக்கு இவைகளை விண்ணப்பஞ்செய்வதாய் நினைத்து தனது பத்தினியாகிய அயிராணியிடம் சொல்லிக்கொள்ள அவள் இராக்ஷதப்படை வீரர்கள் இன்னும் தன்னைத்தேடித்திரிகின்றனர் என்றும் தானும்கூடவருவதாகத்துக்கித்துக்கூறினள். அப்போது தேவராஜன் ஓ! பிராணநாயகியே! பயங்கொள்ளவேண்டாம் நான் திரும்பும்வரையில் உன்னைப் பாதுகாக்க அரிஹரபுத்திரர்காவலாயிருக்க நீவிசனப்படவேண்டியகாரணமென்ன? உன்னை அந்த அய்யனார்வசம் ஒப்பிவித்துப்போக இருக்